பக்கங்கள்: 24

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை 02.10.2022 கதிர் 329

### இது ரகசியம் அல்ல!

என் பழைய அனுபவங்கள் பற்றிய சில விடயங்களை இன்றும் நாளையும் தொடராக - விளக்கமாக - எழுதலாம் என்று எண்ணினேன். அதற்கு மூன்று காரணங்கள்.

ஒன்று - நண்பர் ஒருவரின் தொலைபேசி அழைப்பு. ☞2

# உயர்பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை விலக்கிப் புதிய வர்த்தமானி அறிவிப்பு

## கடும் எதிர்ப்புக்கு அடிபணிந்தார் ஜானாதிபதி ரணில்



கொழும்பின் பல பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அரச இரகசியம் பேணல் தொடர்பான சட்டத்தின் கீழ் சில இடங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியால் விசேட வர்த்தமானி கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியை அண்மித்த பிரதேசம், உயர் நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம், கொழும்பு நீதிவான் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களத்தை ☞22

## நுரைச்சோலை வழமைக்கு திரும்பியது

நுரைச்சோலை அனல்மின் நிலைய மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு சீர் செய்யப்பட்டு மீண்டும் தேசிய மின்னோட்டத்துடன் அது இணைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முதலவாவது மற்றும் மூன்றாவது ☞22

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான

# கையெழுத்து இயக்கம் இன்று கடைசி நாள் தங்காலையில்!

## எதிரணிகள் எல்லாம் ஒன்று கூடுகின்றன

கொழும்பு, ஒக்டோபர் 02

**பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி, தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, சர்வஜன நீதி அமைப்பு ஆகியன ஒன் றிணைந்து முன்னெடுத்து வரும் கையெழுத்து சேகரிக்கும் போராட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணியளவில் தங்காலையில் நடைபெறுகின்றது.** ☞22

## பூநகரி- கிராஞ்சி மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்



தங்களுடைய வாழ்வாதாரம், அட்டை பண்ணை செய்கையாளர்களினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து இருபதுக்கும் மேற்பட்ட பூநகரி - கிராஞ்சி சிறகுவலை மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். ☞22





## தோட்டச் சேவையாளர் சங்கம் தலவாக்கலையில் போராட்டம்

எழுபது சதவீத சம்பள உயர்வைக் கோரி இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத்தினரால் நேற்று தலவாக்கலை நகரில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் உள்ள இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சங்கத்தின் தலைவர், ☞23

## போதைப் பொருளுடன் 15 வயதுச் சிறுவனும் இளைஞனும் கைது



ஐஸ் போதைப் பொருளுடன் 15 வயது சிறுவன் உட்பட இருவர் மானிப்பாயில் கைது செய்யப்பட்டுள்ளனர். மானிப்பாய் ☞23

## வலப்பனை குழியிலிருந்து மீட்கப்பட்ட 2 சடலங்கள்!



நுவரெலியா, வலப்பனை பகுதியில் குழியொன்றுக்குள் இருந்து நேற்று முந்தினம் மாலையில் மீட்கப்பட்ட இரு ஆண்களின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ☞22

## சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய சுற்றாடலில் கடும் துர்நாற்றம்



சபுகஸ்கந்த எண்ணெய்சுத்திகரிப்புநிலையத்தைச் சூழவுள்ள பகுதியில் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் அறிக்கை கோருமாறு பியகம பிரதேச சபையின் தலைவர் ஆனந்த கணேபொல தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ☞23

## சிகரெட், மது விலையுயர்வு பெற்றோல் விலை குறைப்பு

பதினான்காயிரம் கோடி ரூபா மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் எதிர்பார்ப்பில் சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரியை அரசாங்கம் நேற்று முதல் அமுல்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாவாலும், 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 150 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்குறிப்பிட்ட வரி விதிப்பினால் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மேலும் உயரும் என பொருளாதார ☞23

## சட்டவிரோதமான மதுவை உடன் கண்டறிய கியூஆர் பொறிமுறை!

சந்தையில் சட்டவிரோத மதுபான போத்தல்களை உடனடியாக இனங்காண்பதற்காக கலால் திணைக்களம் கணினி செயலியை ☞22

## மின் ஒழுக்கில் தீ பெற்றோலில் பற்றியது வல்வை தம்பதியர் அதனால் எரிந்து சாவு

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் நேற்று விடிகாலை ஏற்பட்ட அனர்த்தம் தொடர்பில் காரணம் வெளியாகியுள்ளது.

மின் ஒழுக்கு ஏற்பட்டதையடுத்து படுக்கை அறையில் சேமித்து வைத்திருந்த பெற்றோலில் தீ பற்றியதால் தூக்கத்திலிருந்த கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணை மற்றும் உடற்கூற்று பரிசோதனையின் பின் அறிக்கையிடப்பட்டுள்ளது. ☞23



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தது - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெற்ற சமாதான முயற்சிகள் தொடர்பில் நமது பத்திரிகையில் மூத்த சமூக செயற்பாட்டாளர் சட்டத்தரணி ரவீந்திரன் ஆஸ்திரேலியாவில் இருந்து தொடர்ந்து எழுதி வரும் கட்டுரை தந்த நினைவுக் கிளர்ச்சி. மூன்றாவது - இனிமேல் இந்த விடயங்களை இப்போதைக்கு நான் எழுத முடியாத சூழல் ஏதும் வந்து விடுமோ என்ற ஆதங்கம்.

சரி.இனி விடயத்துக்கு வருகிறேன்.

சுவிட்ஸர்லாந்தில் ஜெனிவாவில் தொழில் செய்யும் என் நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

“உனக்கும் மஹிந்தருக்கும் பத்திரிகையாளன் - அரசியல்வாதி என்ற அடிப்படையில் உள்ள ஊடாட்டம் பற்றி அறிந்திருக்கிறேன். இப்போதைய ஜனாதிபதி ரணிலுக்கும் உனக்கும் ஊடாட்டம் எப்படி? உனது ஊடக அனுபவங்கள் பற்றிய புத்தக வெளியீட்டு விழா கொழும்பில் நடந்த போது அவர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் என்பதை மட்டும் அறிந்திருந்தேன். வேறு ஏதேனும் தொடர்பு உண்டா?” - என்று இரண்டு ஒரு நாள்களுக்கு முன்னர் கேட்டார்.

“இரண்டொரு நாள் பொறு. விவரமாக எழுதுவேன். அப்போது பார்” என்று அந்த இளைமைக் கால நண்பனிடம் கூறினேன்.

2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயக மக்களைத் தேர்தலை பகிஷ்கரிக்கும்படி விடுதலைப் புலிகள் வழிகாட்டுதல் விடுத்த போது, அதைக் கைவிடும்படி கோரி தனது செய்தித் தூதுவராக வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்னைப் புலிகளின் தலைமையிடம் அனுப்பினார்.

அதில் கட்டவிழ்ந்த விடயங்கள் பல ஆழமான தகவல்களைக் கொண்டவை. தனது உறுதியான நிலைப்பாட்டில் சற்று வளைந்து கொடுக்காமல், கிடைத்த அற்புதமான வாய்ப்பை அப்போது கோட்டை விட்டார் ரணில் விக்கிரமசிங்க. தேர்தலுக்கு நான்கு, ஐந்து நாள்கள் இருக்கும் போது இணக்கப்பாடு ஒன்றுக்கு இறங்கி வர விடுதலைப் புலிகளின் தலைவர் சம்மதித்தார். என் மூலமே அந்தச் செய்தி வேட்பாளர் ரணிலுக்குத் தெரியப்படுத்தப் பட்டது. ஆனால் வாக்குறுதி கொடுத்தால் காப்பாற்ற வேண்டும் என்ற இக்கட்டில் அந்த வாய்ப்பைத் தவறவிட்டார் ரணில். அதற்கு சாட்சியங்கள், ஆதாரங்கள் தாராளமாக உண்டு. அது பற்றி முழு விவரமான கட்டுரைத் தொடரை விரைவில் எழுதுவேன்.

அதற்கு அப்பால் மஹிந்த தரப்பிடம் பணம் வாங்கிக் கொண்டு தமிழ் மக்களை வாக்களிக்காமல் புலிகள் தடுத்தார்கள் என்பதெல்லாம் சுத்தப்புரளி. உண்மையில் நடந்தவற்றை - ரணிலின் மிதப்பு எண்ணத்தால் அவர் வாய்ப்பைக் கோட்டை விட்டார் என்று யதார்த்தத்தை - எனது அடுத்த கட்டுரை தொடரில் நான் அம்பலப் படுத்தும் போது வாசகர்கள் உறுதியாக உணர்வார்கள். அந்தக் கட்டுரைக்குச் சற்றுப் பொறுங்கள்.

90 களின் கடைசி கட்டத்தில் இருந்தே தமிழ் பத்திரிகையாளன் என்ற முறையில் எனக்கும் ரணில் விக்கிரமசிங்கவுடன் ரொம்பப் பரிச்சயம் உண்டு.

1999 ஜனாதிபதி தேர்தலின் போது யாழ்ப்பாணத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, ஐ.தே.கட்சியில் சேர்ந்து செயல்படுவதற்கு தியாகராஜா மகேஸ்வரன் தீர்மானித்த போது என்னுடன்தான் ரணில் விக்கிரமசிங்கவைக் கொழும்பில் அவர் சந்தித்தார்.

2001 இல் ரணிலின் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு முயற்சி ஆரம்பமானமை எனக்கும் ரணிலுக்கும் இடையிலான ஊடாட்டத்தை அதிகரித்தது.

நான் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திற்கு மிக நெருக்கமானவன் என்பதால் அந்த நட்பை அச்சமயத்தில் சரிவரப் பயன்படுத்தினார் ரணில்.

அப்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் தயாராவதில் என் உள்ளீடுகள் சிலவும் இருந்தன. ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் அது குறித்து புதுக்குடியிருப்பில் தலைவர் பிரபாகரனோடும் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனோடு நான் விரிவாகக் கலந்துரையாடி இருந்தேன். அது லண்டனில் இருந்து பாலா அண்ணன் மேற்கொண்ட வழிப்படுத்தலில் நடந்தது.

ரணில் அரசு - புலிகள் பல்வேறு நாடுகளில் நடத்திய ஆறு சுற்றுப் பேச்சுகளின் போதும் நான் அங்கங்கு ஒன்றுக்குக் கூட - ஒரு நாள் கூட - தவற விடாமல் பக்கத்திலிருந்து செய்தி அனுப்பினேன். சமஷ்டித் தீர்வுக்குப் புலிகள் இணங்குகின்றார்கள் என்ற ‘எக்ஸ்குளூசிவ்’ செய்தி உட்பட பேச்சுப் பற்றிய உள்வீட்டுத் தவல்கள் எல்லாம் என் மூலமே கசிய விடப்பட்டன.

ரணில் அரசு - புலிகள் தொடர் பேச்சு நடுவே ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளின் முன்னாயத்தக் கூட்டம் நடைபெற்றது. இலங்கை அணிக்கு பிரதமர் ரணில் தலைவர். அரசுப் பேச்சுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸூம் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் மதியுரைஞர் பாலசிங்கமும் இலங்கை அணியின் இணைத் துணைத் தலைவர்கள். அதாவது இலங்கை அணியில் தலைவரான பிரதமர் ரணிலின் கீழ் பீரிஸூம் பாலசிங்கமும் துணைத் தலைவர்கள்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒஸ்லோவின் ஹெல்மென்கோலன் குன்றின் உச்சியில் உள்ள ஹோட்டேலில் உச்சப் பனிப்பொழிவின் மத்தியில் நடைபெற்றது. கூட்டத்துக்கு முதல் நாள் அந்த ஹோட்டலில் ரணில் - பாலசிங்கம் சந்திப்பு இடம் பெற்றது. இருவரும் ஹோட்டல் கருத்தரங்க அறையில் சந்திக்க வந்த போது சுமார் 20 - 25 மீட்டர் தொலைவில் இருந்து ஊடகவியலாளர்கள் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். நான் படப்பிடிப்பாளர் பக்கத்தில் நின்றேன்.

“படப்பிடிப்புக்கு வசதியாக சற்று நெருங்கி வாருங்கள்!” - என்று நான் கொஞ்சம் சத்தமாகக் கூறினேன். என் குரலை கேட்டதும் பாலசிங்கம் அந்த கூட்டத்தில் என்னைத் தேடினார். சைகை காட்டி வரும்படி அழைத்தார். ஏனைய பத்திரிகையாளர்களை விட்டு நான் மாத்திரம் முன்னேறி நெருங்கினேன். என் தோளில் ஒரு கையை வைத்தவாறு என்னை பிரதமர் ரணிலுக்கு அறிமுகப்படுத்த முயன்றார் பாலா அண்ணன். அவர் ஆங்கிலத்தில் கூறிய வார்த்தைகளை நான் மறந்து விட்டேன். ஆனால் “கில்லாடி தமிழ் பத்திரிகையாளர்’ என்ற சாரப்பட அந்த வாசகம் அமைந்ததாக நினைவு. ’தெரியும்’ என்றார் ரணில்.

உதவும் நாடுகளின் மாநாடு மே 2003 இல் ஜப்பானில் டோக்கியோவில் நடைபெற ஏற்பாடாகியது. ஆனால் அதற்கு இடையில் இன்னொரு முன் ஆயத்தக் கூட்டத்தை அமெரிக்காவில் ஏற்பாடு செய்தனர். அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதால் அந்தக் கூட்டத்துக்குப் புலிகள் அழைக்கப்படவில்லை. புலிகளை வெட்டி விட்டு சர்வதேச நாடுகளின் உதவி பற்றி ஆராயவே இந்தத் திட்டம் என்று புலிகள் சீறினர். சமாதான பேச்சுக்களில் இருந்து அவர்கள் வெளியேறினர்.

உதவும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் நடைபெற்ற போது அதற்குப் புலிகளையும் தம்முடன் அழைத்துச் செல்லப் பிரதமர் ரணில் தலை கீழாக முயன்றார். என் மூலமும் புலிகள் தரப்பை அணுகி வலியுறுத்து முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் தலைவர் பிரபாகரன் அசையவில்லை.

ஜப்பான் கூட்டம் பற்றிய தகவல்கள், விவரங்களை லண்டனில் இருந்த பாலா அண்ணனுக்கு ‘ரன்னிங் கொமண்ட்ரி’ போல நான் அவ்வப்போது வழங்கிக் கொண்டிருந்தேன்.

ஜப்பான் டோக்கியோ கூட்டத்துக்கு அப்போது இலங்கையின் சட்டமா அதிபராக இருந்த கமலசபேசனும் வந்திருந்தார். அவர், அவரின் மூத்த சகோதரர்களோடு என் தந்தையார் நெருங்கிய நண்பர். கமலசபேசன் என் ஊரவர். கொழும்பு சட்டக் கல்லூரியில் எனது விரிவுரையாளர். சட்டக் கல்லூரியில் என் பாதுகாவலராக அப்போது சாதாரண அரசு சட்டத்தரணியாக இருந்த கமலசபேசனைத் தான் என் தந்தையார் நியமித்திருந்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)




# புதிதாக முளைக்கும் மதுபானநிலையம் கிளிநொச்சியில் மக்கள் பாரிய எதிர்ப்பு!



கிளிநொச்சி, ஒக். 02

கிளிநொச்சி கரடி போக்கு சந்தியை அண்மித்த பகுதியில், புதிதாக மதுபான விற்பனை நிலையத்துக்கான அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில், அனுமதி வழங்கப்பட்ட பகுதியில் இடம் பெற்றது. இதன்போது, அனுமதியை இரத்து செய்யுமாறு பதாதைகளை ஏந்தி மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் நிலையத்தினரால் ஒளிப்படம் எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ள பகுதி, பெண்கள் பாடசாலை அமைந்துள்ள பகுதி என்பதுடன், சிறுவர், பெண்கள் அதிகம் நடமாடும் பகுதி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.













காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முட்டாள் ஆலோசகர்கள்

மக்களின் சமூக ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்தார் கோட்டாபய ராஜபக்ஷ. அடுத்த ஒன்பது மாதங்களில் நடைபெற்ற பொது தேர்தலில் நாடாளுமன்றத்திலும் பெரும் வலுவான அதிகாரத்தை இலங்கை மக்கள் அவருக்கு வழங்கினர். முந்தைய ஜனாதிபதிகளுக்கு இல்லாத – கிட்டாத – ஆதரவு அது. நாடாளுமன்றத்தில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்கள்.

அதனை வைத்துக்கொண்டு இருபதாவது திருத்தம் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளின் உச்ச அதிகாரத்தை அவரால் சுவீகரிக்கவும் முடிந்தது.

இப்படி அதிகாரம், ஆதரவு எல்லாம் கிட்டியும் குறுகிய காலத்தில் அவை அனைத்தையும் போட்டுடைத்தார் அவர்.

எதேச்சாதிகாரியாக மக்கள் முன் அவர் காட்சிப்படுத்தப்பட்டார். மக்கள் எதிர்ப்பு நாளொரு கிளர்ச்சியாகவும் பொழுதொரு போராட்டமாகவும் வெடித்தது. அவற்றிற்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டை விட்டே ஓடித்தப்ப வேண்டியவரானார் கோட்டாபய.

இந்த நிலைமை ஏற்பட்டமைக்கு காரணம் என்ன? அவருக்கு அரசியல் தெரியாது என்பது ஒரு புறமிருக்க, அவருக்கு உதவியாளர்களாக, ஆலோசகர்களாக வந்தவர்களுக்கும் கூட அரசியல் தெரிந்து இருக்கவில்லை. அவர்கள் அறிவுபூர்வமாகச் சிந்திப்பவர்களாகவும் இருக்கவில்லை.

தமிழர்களுக்கு இந்த நாட்டில் பிரச்சினையே இல்லை என்று அரசியல் பிதற்றல் கூறும் சரத் வீரசேகர போன்றோரே அவரைச் சூழவிருந்தனர்.

அரசியல் பதவிகளில் மாத்திரம் அல்ல, அரச நிர்வாகத்தின் உயர் பதவிகளிலும் அத்தகையோரையே அவர் தேடிப் பிடித்து நியமித்தார்.

உலக நாடுகள் எங்குமே இடம் பெறாத முறையில், கொரோனாத் தொற்றில் உயிரிழந்த இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடலங்களைப் புதைக்கவே கூடாது, கட்டாயம் எரிக்க வேண்டும் என்று, மத மார்க்கங்களுக்கு மாறான – மிகப் பிற்போக்குத்தனமான – காட்டுமிராண்டித்தனமான – வல்வந்தமான – செயற்பாட்டுக்கு ஆலோசனை கொடுத்த 'முட்டாள் நிர்வாகிகள்'தான் அவரைச் சூழ இருந்தனர். அப்படி ஆலோசனை கொடுத்த மர்ம நிபுணர்கள் யார் என்பது இன்னும் வெளிவரவில்லை.

முக்கிய அமைச்சுகளின் செயலாளர் பதவிகள் வரை இவ்வாறு பொருத்தமற்ற – துறைத் தகைமை கிஞ்சித்தும் இல்லாத – 'நிபுணர்களை' நியமித்தமையால் மீண்டும் அரசியலுக்கே தலைகாட்ட முடியாத பேரவலத்தை அவர் சந்திக்க வேண்டியவரானார்.

தமிழருக்கு எதிரான யுத்தத்தின் போதும் கூட இத்தகைய முட்டாள் அதிகாரிகளை வைத்துத்தான் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற மோசமான படுபாதகச் செயல்கள் மூலம் யுத்தத்தில் அவர் வென்றார். ஆனால் அந்தக் கொடூரங்களை அச்சமயம் தமிழர் தேசத்தை இரும்புத்திரையிட்டு மறைத்து அவரால் சமாளிக்க முடிந்தது.

ஆனால், அரசியலில் அந்த மறைப்பு எடுபடவில்லை. நாட்டில் படுமோசமான நிலைமையை ஏற்படுத்திய குற்றத்துக்காக அவற்றுக்குப் பொறுப்பேற்று அவர் ஓடித் தப்ப வேண்டியவரானார்.

இப்போது உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான தமது வர்த்தமானி அறிவிப்பை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைவாங்கி இருக்கின்றார். அவர் கூட தவறான ஆலோசகர் ஒருவர் மூலம்தான் இந்த விடயத்தில் ஆழம் தெரியாத பாதாளத்தில் காலை விட்டு, குறுகிய காலத்தில் சுதாகரித்து, அதிலிருந்து மீண்டிருக்கின்றார் என்று தெரிகின்றது.

உதவியாளர்கள், ஆலோசர்கள் பிழைத்தால் உபத்திரவம்தான்.

# மாலைதீவு சுகாதார இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட 17 பேர் அடங்கிய தூதுக்குழு இலங்கைக்கு விஜயம்!

## சுகாதார அமைச்சர் கெஹலிய தகவல்



மாலைதீவின் சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் ா மக்கீர் உள்ளிட்ட 17 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதனையடுத்து, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் தூதுக்குழுவினருக்கும் இடையிலான விடே செயலமர்வு கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுகாதாரத்துறையில் காணப்படும் முன்னேற்றம், ஒத்துழைப்பு, அனுபவம் என்பன தொடர்பாகக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குடியேறிகள் சுகாதார கொள்கையை தயாரிப்பதற்கான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்தத் குழு நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

2013 ஆம் ஆண்டு நாட்டில் குடியேறிகள் சுகாதார கொள்கை தயாரிக்கப்பட்டது. அதனை ஆராய்ந்து, அந்த நாட்டில் குடியேறிகள் சுகாதாரக் கொள்கையைத் தயாரிப்பதற்கான அனுபவத்தை பெற்றுக்கொள்வதே இந்தத் தூதுக்குழுவின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் இன்று இருவருக்கு நினைவேந்தல்

## கொழும்பு தமிழ் சங்கத்தில் நிகழ்வு

கொழும்பு, ஒக்.02

தமிழ் இலக்கியத் துறையில் பெரும் பங்காற்றி அண்மையில் காலஞ்சென்ற சிரேஷ்ட சட்டத்தரணி ராஜகுலேந்திரன், திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வொன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம், கொழும்பு –6 –ருத்ரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்க, சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இன்று 2ஆம் திகதி ஞாயிறு மாலை 4.00மணிக்கு நடாத்தவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெறவுள்ளஇந்த நிகழ்வில் அறிவிப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத், சாஹித்ய ரத்னா மு.சிவலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன், மருத்துவக் கலாநிதி ÷ஞானம்' ஞானசேகரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி – மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் நினைவு அரங்கில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு முஸ்லிம் காங்கிரஸின் புதிய வெளிச்சங்கள் இலக்கிய மையம் தமிழுக்கு தொண்டாற்றியவர்களை நினைவு கூரும் வரிசையில் முன்னர் கவிக்கோ அப்துல் ரஹ்மான்,செனட்டர் மஷூர் மௌலானா, எஸ்.எச்.எம்.ஜெமீல் போன்றோருக்கு நடத்திய நினைவேந் தல் நிகழ்வுத் தொடரில் ஒன்றாகும்.

# மட்டக்களப்பு மக்களை எண்ணி நான் மிகவும் பெருமையடைகிறேன்




இந்திய தூதுவர் பெருமிதம்

மட்டக்களப்பு, செப். 02

காந்தியின் அஹிம்சைப்போராட்டத்தினையும் தியாகத்தையும் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் நினைவுகூருவதை எண்ணிதான் பெருமைகொள்வதாக இந்திய தூதுவர் கோபால் பக்லே தெரிவித்தார்.

காந்தி ஜெயந்தி தினம் இன்று அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் அதன் சிறப்பு நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) மட்டக்களப்பு காந்திபூங்காவில் நடைபெற்றது.


அஹிம்சையை உலகுக்குபோதித்த மகாத்மா காந்தியின் பிறந்த தினம் காந்தி ஜெயந்தி தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

நேற்று காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள் மட்டக்களப்பு காந்திபூங்காவில் உள்ள மகாத்மா காந்தி சிலையருகில் நடைபெற்றது.

காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு அதன் தலைவர் அ.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இந்திய தூதுவர் கோபால் பக்லே கலந்துசிறப்பித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது காந்தியின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ரகுபதி ராக ராஜாராம் பாடலும் இசைக்கப்பட்டது.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 071 7354308**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road, Kilinochchi**



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL



## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டை பதுளையில் நடந்தது!









பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை வெள்ளிக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை பதுளையில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி. சிவசக்தி ஸ்ரீகாந்தராசா**

அவர்கள் கடந்த (29.09.2022) வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து பாலாமணி தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்ற கந்தையா நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஸ்ரீகந்தராசாவின் பாசமிகு மனைவியும், தர்மநாயகி காலஞ் சென்றவர்களான கனகலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் குணஈஸ்வரி, (மண்டைத்தீவு), நகுலேஸ்வரி (கிளிநொச்சி), அரங்கநாயகி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புமைத்துணியும் பவித்திரா, ஸ்ரீவரதன் (சுவிஸ்), கஜந்தன் (லண்டன்), கிருசாந்தன் (லண்டன்), சுஜிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயரும் ரெஜீனா (சுவிஸ்), சுகன்யா (லண்டன்), திலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றிவான், விகான், நிலான், லியா, லயா ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

தோற்றம் : 20.08.1963
மறைவு : 19.09.2022

அன்னாரது இறுதிக்கிரியைகள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று [அச்சுவேலி] வல்லை மயானத்தில் பூதவுடலானது தகனம் செய்யப்படவுள்ளது இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

அச்சுவேலி வடக்கு

தகவல்:- அன்பு கணவர் ஸ்ரீகந்தராசா (சிறி)
தெ.பே:- 077 8496546/07777 051 01 /+41 75 77487 433/+41 78 838 3727






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்



## சிலந்தியிடம் பாடம் கற்ற அரசன்

போரில் தோல்வி அடைந்த அரசன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒழிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். தோல்வியுற்ற அரசனை கொலை செய்யுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்றுஅங்கு இருந்த ஒரு குகையில் ஒழிந்து கொண்டான்.

தோல்வி கண்ட அரசன் மிகவும் மன வருத்தம் கொண்டான். மனச்சோர்வினால் துணிவு இழந்தான். ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும் போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்?

நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணினான் மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரிய தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தன் நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.


# திருக்குறளின் சிறப்புகள்

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல்.

திருவள்ளுவரை நாயனார், தேவர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யில் புலவர் என்றும் சில சிறப்புப்பெயர்களால் அழைப்பர்.

பழந்தமிழ் நூல்களில் நான்கு பெரும் பகுப்புக்கள் உள்ளன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை அடங்கிய பதினென்மேல்கணக்கு
பதினென்கீழ்க்கணக்கு
ஐம்பெருங்காப்பியங்கள்
ஐஞ்சிறு காப்பியங்கள்



ஆகியவை அவை.அவற்றில் பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் முப்பால் என்னும் பெயரோடு இந்நூல் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் முப்பால் எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய இவை ஒவ்வொன்றும் இயல் என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் பத்து பாடல்களைத் தன்னுள் அடக்கியது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. இவ்வகை வெண்பாக்களால் ஆகிய அக்காலத்திய முதல் நூலும் ஒரே நூலும் இது தான்.

குறள் வெண்பாக்களால் ஆனமையால் குறள் என்றும் திருக்குறள் என்றும் இது பெயர் பெற்றது.பாயிரம் என்னும் பகுதியுடன் முதலில் அறத்துப்பால் வருகிறது. அதிலும் முதலில் காணப்படுவது, கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம். தொடர்ந்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய அதிகாரங்கள்.அடுத்து வரும் இல்லறவியல் என்னும் இயலில் 25 அதிகாரங்கள் அடுத்துள்ள துறவறவியலில் 13 அதிகாரங்களுடன் முதற்பாலாகிய அறத்துப்பால் பகுதி முடிவுறுகிறது.

அடுத்து வரும் பொருட்பாலில் அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபு இயல் ஆகிய இயல்கள் இருக்கின்றன. அரசு இயலில் 25 அதிகாரங்கள் உள்ளன. அமைச்சு இயலில் 32 அதிகாரங்களும், ஒழிபு இயலில் 13 அதிகாரங்களும் உள்ளன.கடைசிப்பாலாகிய இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பாலில் இரண்டு இயல்கள் களவியலில் 7 அதிகாரங்களும், கற்பியலில் 18 அதிகாரங்களும் உள்ளன. ஆகமொத்தம் 7 இயல்கள் 133 அதிகாரங்கள் 1,330 பாடல்கள்.திருக்குறளை மொத்தம் 12,000 சொற்களில் வள்ளுவர் பாடியுள்ளார். ஆனால் இவற்றில் ஐம்பதுக்கும் குறைவான வடசொற்களே உள்ளன.

### திருக்குறளின் சிறப்பு

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. – என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய அ வில் ஆரம்பித்து, 1,330 ஆம் குறளாகிய, ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம், கூடி முயங்கப்பெறின்என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய ன் னுடன் முடித்திருக்கிறார்.வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவ தால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர்: திருக்குறள், முப்பால், உத்தர வேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை.

பழங்காலத்தில் இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் தற்சமயம் சிறப்பாகக் கருதப்படுவது திருக்குறள் முனுசாமியின் உரை.

தனிமனிதனுக்கு உரிமையானது இன்பவாழ்வு அதற்குத் துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன் மனத்துக்கண் மாசிலன் ஆதலே அனைத்து அறம் அறத்தால் வருவதே இன்பம். அறவழியில் நின்று பொருள் ஈட்டி, அதனைக்கொண்டு இன்ப வாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு உலக மாந்தரும் இன்பமுறச் செய்யவேண்டும். பொருளியலாகிய பொதுவாழ்வுக்கும் இன்ப இயலாகிய தனிவாழ்வுக்கும் அடிப்படை அறம்தான் என்பது திருக்குறளின் மொத்தமான நோக்கு.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தைத் திருக்குறள் வகிக்கிறது. இதுவரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**இறைவன் மனிதனுக்குச் சொன்னது**
**கீதை**
**மனிதன் இறைவனுக்குச் சொன்னது**
**திருவாசகம்**
**மனிதன் மனிதனுக்குச் சொன்னது**
**திருக்குறள்**

## குட்டித்தம்பி ஆடும் பந்து

குட்டித்தம்பி ஆடும் பந்து
குதித்து குதித்து ஓடுதே
தட்டி தட்டி ஆடும் பந்து
தண்ணீருக்குள் விழுந்ததே
விழுந்த பந்து மேலே வந்து
மிதந்து மிதந்து வருகுதே
மிதக்கும் பந்தை எடுத்திடவே
அக்கா நீயும் ஓடிவா
மிதக்கும் பந்தை எடுத்திடவே
அக்கா நீயும் ஓடிவா




**பாட்டியம்மா கடையிலே**
**பருப்பு வட சுடையில**
**காகம் வந்தது இடையில**
**கௌவிச் சென்றது வாயில**
**பாட்டியம்மா கடையிலே**
**பருப்பு வட சுடையில**
**காகம் வந்தது இடையில**
**கௌவிச் சென்றது வாயில**
**நரி அண்ணா வந்தாராம்**
**பாட்டுப்பாட சொன்னாராம்**
**நரி அண்ணா வந்தாராம்**
**பாட்டுப்பாட சொன்னாராம்**
**வடை கீழ விழுந்ததாம்**
**நரி தூக்கி சென்றதாம்**
**வடை கீழ விழுந்ததாம்**
**நரி தூக்கி சென்றதாம்**

## ஒன்று பின்னே இரண்டு

ஒன்று பின்னே இரண்டு
ஓடும் பந்து உருண்டு
மூன்று நான்கு ஐந்து
உந்து காலால் பந்து
ஆறு ஏழு எட்டு
ஆஹா கையை தட்டு
ஆறு ஏழு எட்டு
ஆஹா கையை தட்டு

# RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir
Page I English for all Sunday the 2nd of October 2022

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# We Are All Connected

Most living things cannot make their own food; they have to forage for food instead. Living things that must find food are called consumers. Consume is another word for eat. Some consumers eat only plants—they are called herbivores. Deer are herbivores, and so are cows and horses. Other consumers eat only animals—they are called carnivores. Lions are carnivores, and so are sharks, eagles, and hawks. Eagles and hawks eat snakes and insects. They also eat small animals. Some consumers eat plants and animals. They are called omnivores. Many people are omnivores because they eat meat as well as fruits and vegetables. Humans are not the only omnivores. Bears are omnivores, too. So are apes and monkeys.

**1. What is the text about?**
A. consumers B. apes
C. deer D. plants

**2. What does a carnivore eat?**
A. both meat and plants B. only plants
C. only meat D. nothing

**3. Which word has the same root word as consumers?**
A. summers B. consumption
C. consent D. resume

**4. What is a living thing that eats only plants called?**
A. an eagle B. an omnivore
C. a carnivore D. a herbivore

**5. Which phrase compares two objects?**
A. not the only B. and so are
C. cannot make D. another word



Have you ever wondered about where we get our food? All living things require energy to survive. They receive that energy from food. All living things depend on one another for food. Some living things are producers. Producers are living things that make their own food they do not need to find food. Flowers, trees, and other plants are producers. They get energy from sunlight and use that energy to make their own food. Producers are extremely important. They are the only living things that can create their own food. All other living things depend on them for nourishment. That is why we must take good care of our forests, grasslands, and plants; without them, we could not survive.

**1. What is this text about?**
A. sunlight B. habitats
C. the environment D. producers

**2. How do flowers, trees, and other plants make their food?**
A. They get their food from other plants.
B. They must find food.
C. They use energy from sunlight.
D. They use air to make food.

**3. Which word is defined as a living thing that makes its own food?**
A. energy B. a producer
C. sunlight D. a living thing

**4. Which is a synonym for depend?**
A. rely B. avoid
C. bake D. make

**5. Which word describes the tone of this text?**
A. factual B. angry
C. funny D. persuasive

Every living thing dies. After a living thing dies, what happens to it? It decomposes, or breaks down. But it cannot do that alone. We need decomposers to break down living things after they die. Decomposers break down dead material and use some of it for food.

They turn the rest of the dead material into nutrients. Then, those nutrients become part of the soil. That is how trees, flowers, and other plants get nutrients. Flies are decomposers; so are worms and many kinds of insects. Bacteria are decomposers, too, and so are fungi.

All of them break down dead material and turn it into nutrients that trees, flowers, and other plants can use. Decomposers such as flies and worms are not very big. But they are very important. Just imagine what the world would be like without them!

**1. What is the topic of the text?**
A. nutrients B. decomposers
C. bacteria D. flowers

**2. Why do we need decomposers?**
A. They break down dead material and make nutrients.
B. They are smaller than other living things.
C. They eat insects.
D. They are much larger than other living things.

**3. How many predicates are in the following sentence: Decomposers break down dead material and use some of it for food.**
A. three B. one
C. none D. two


**4. Which word means to break down?**
A. bacteria B. nutrient
C. decompose D. imagine

**5. Which word is plural?**
A. decomposes B. dies
C. fungi D. happens



# We Are All Connected



What do you have in common with an oak tree? Humans and oak trees are both important parts of the food web. Every living thing is part of this web of life, and every living thing depends on other living things in the web. Producers, consumers, and decomposers work together. They need each other.

Producers need decomposers. For example, a tree is a producer. A worm is a decomposer. When worms break down dead material, they create nutrients. They add those nutrients to the soil. The tree then uses the nutrients in that soil to create food. Producers also need consumers. When a consumer such as a lion dies, it leaves dead material behind. That dead material becomes nutrients that trees use.

Consumers need producers. Zebras are consumers. Plants are producers. Zebras eat plants. Lions are consumers, too. They eat zebras. Without the plants, there would be no zebras, so lions need plants, too. Consumers also need decomposers. Worms and insects are decomposers. Without worms and insects, there would be no nutrients in the soil. Trees and other plants could not grow, so zebras would have nothing to eat. Without zebras and other smaller animals, lions could not eat.

Decomposers need producers and consumers. Decomposers need dead material that they can use for food. They get that dead material from producers and consumers that have died.

When a tree or a zebra dies, decomposers such as worms use that dead material. They use some of it for food. They turn the rest into nutrients.

If you took away all of the decomposers, there would be no nutrients. So there would be no producers. That would mean that consumers would have nothing to eat. If you took away all of the producers, there would not be food for the consumers to eat. And if you took away all the consumers, there would not be dead material to make nutrients. Every part of the food web is important.

***1. Which happens first?***
A. The zebra eats the plant. B. The zebra dies.
C. A plant grows. D. A worm decomposes the zebra.

***2. This text is an example of which text structure?***
A. chronological order B. argument and support
C. cause-and-effect D. compare and contrast

***3. Which purpose for reading is most appropriate for this text?***
A. I want to know why spiders weave webs.
B. I want to know how living things are connected and work together.
C. I want to learn how zebras and lions are similar and different.
D. I want to know why trees are green.

***4. Which statement is true?***
A. Humans are nutrients. B. Humans are decomposers.
C. Humans are producers. D. Humans are consumers.

***5. Which would a decomposer likely want to eat?***
A. a dead tree B. a living flower
C. a rock D. a piece of paper

***6. Imagine that there were no zebras. What do you think would happen?***
A. There would be more lions.
B. There would not be as many lions.
C. There would be more zebras.
D. There would be no more trees.

***7. What happens without decomposers?***
A. dead material is broken down
B. lions eat trees
C. more trees grow
D. trees cannot grow

***8. Which is true about producers?***
A. They make their own food.
B. They break down material into nutrients.
C. They eat consumers.
D. They are not important.

# The Entrance



It was a storm coming up in the forest. Lightning flashed and thunder roared. A cub was looking at this from a cave. It waited for it's father, a lion to come back with dinner.

"Flash!" lightning struck a tree. The tree fell right in front of the cave. The cub was stuck! The inside of the cave was plunged into darkness. It looked like night in the cave.The cub was desperate and clueless. It ran around in panic, screaming out of it's wits.

Meanwhile, the lion returned from it's hunt. It saw this unfold. Immediately, the lion thought of a plan and sprang into action. It thought, "Maybe I can put some fire". Thus, the lion rubbed two sticks to make fire and threw it on the tree. Then it thought, "What if my baby is burnt in the heat? Will it die?". The cub felt the heat. It leapt into a small pond, which it drinks water from to escape. The lion,was in total desperation, walking around anxiously. Finally, the rain came and extinguished the flames, relieving the lion a bit. As it rained, the leaves sank to the ground, giving way to enter the cave. The lion ran into the cave.

The lion saw it's cub jumping out of the pond and shaking of the water.

**By: A. Nithun**



A team of delegates from the British Council visited the University Jaffna and had a productive discussion with Vice-Chancellor Professor Sivakolundu Srisatkunarajah.

South Asia Regional Director; Mr. Adrian Chadwick, Senior Project Manager - SEDR(E & S) ; Mr. Andrew Cross and Teaching Operations Manager (Sri Lanka); Mr. Bhavalaksan Pararajasingam from the British Council have attended this meeting. On behalf of the university, Head of the Department of English Language Teaching (DELT); Dr. K. Sanmuganathan, Senior Lecturer Mrs. R. S. Rajashanthan and Prof. K. Gajapathy (Active Citizens facilitator) have joined the discussion.

The Vice-Chancellor welcomed the delegates and the discussion was about the current practices and necessary improvement related to the English language education in our university and Jaffna peninsula. In addition, the discussion featured about the collaborative projects, such as GGP-UNICYCLE and Actice Citizens, between the British Counicl and the University of Jaffna.

# How to Dress to Impress Girls – Mens Fashion Tips

All boys have questions, How to Dress to Impress Girls? Nowadays, boys are more conscious than a girl to look smart and handsome, to impress a girl. It depends on what your girl wants you to look like. Many girls and women love a particular fashion taste for men. So Below are some points to keep in mind, while you think to impress girls. Also, these tips will help you to what to wear to impress your crush girl.

You can also watch basic style tips for men you need to know while you are going out. Moreover, watch this video on how to dress for a wedding to impress women.

Here are Ideas on How to Dress to Impress Girls

### 1. The Psychology Of Colors to impress girls




Color plays an important psychological role in each life. Girls are much more conscious of color. Color like Black, White, Grey, and Blue. This hue goes well with all skin tones. Even this color Platte is more likable by girls.

### 2. Proper Etiquette to impress girls

Your grooming is an essential element when you want to impress your girl. Choosing a proper type of shirt will always make you feel better and loved.

#### *Winkle free clothes*





It looks dirty and sloppy like you just take out that from the hanger and wore that through the day. Make sure your outfits are properly ironed will make you look crisp and definitely attract the female's eye.

#### *Grooming*



No need to go clean shave, if you like to put beard and Mustache no worry just keep it in proper shape, so it enhances your look and is remarkable for all, as well as your girl too.

#### *Roll Up Your Sleeves*

Yes, girls impress if the guy rolled up his



shirt sleeves neatly. It proffers you, gentleman. Roll-up sleeves looking to go for a smart, yet casual look for any occasion. It almost becomes a style statement to impress a girl. If you have a tattoo or good biceps, the higher roller style is for you.

#### *Fragrance*




To save yourself from the embarrassment of body odor, keep perfume or scent handy with you at all times. Eau de Cologne, Pour Homme, Fresh, Oriental, spicy with citrus are fragrance that attracts more to females.

### 3. Go for Trending Plaid Trousers

Rather go with jeans opt trousers or chinos,



according to Pinterest prediction to this year, their key search for men's cropped trousers increased by 671 %.

If you have scared with experiment with a new fashion. Go for simple yet sober trending Plaid Trousers Pant. It will never let you down, even it looks stylish and comfortable at the same time. Pair it with a solid shirt, a pair of shoes, and you are good to go. You could carry this look for a casual date with a girl after a workday.

### 4. Trending Printed T-shirt

Printed t-shirts have always been a trendier option to pick over solid color t-shirts. Opt for our favorite color printed t-shirt with jeans. These outfits are perfect to turn all heads, not only women or girls but also men's heads, where ever you go. At present printed t-shirt




designs like Camo Print, Chinese Dragons, Complex Designs with Flat Colors, Foil, Hawaii, statement slogan print are trending in boys also these designs are preferred by girls.

### 5. Polo neck T-shirt with Jeans



Gaining popularity in recent times is the polo collar t-shirt that's perfect for the weekend and dating without seeming too casual. A very versatile garment, this piece manifests sophistication with simplicity. A plain colored polo neck t-shirt design can be worn for dressy occasions while prints are great for all-day events.

You can substitute your polo neck t-shirt with mandarin collar t-shirts.

### 6. Versatile Blue shirts with khaki Bottom



Ditch you're all color full shirt. Put your finger on the Blue Shirtdress in Khaki bottom is a simple and evergreen color combination that never fails to evacuate your impression on others. Do make sure, roll up the sleeves to get a more simple and casual look. For a casual dinner date opt for a simpler look to effortlessly enjoy your night.

### 7. Shirt, T-shirt and Jeans Combo



For a casual dinner date opt for a cool look wear a white or grey t-shirt under your checks print shirt with dark jeans, and you're good to go. Also, try to pair a deep blue crew-neck sweater with white or dark blue jeans. This combo will work best in your date or bash to impress your girl with your dressing sense.

### 8. Don't Over Dress






You never want to overdress, when it comes to impressing females. Wearing too many layers of clothes seems to lack confidence and proper dressing sense. Go with a brown or black Jacket combination with the t-shirt as the effect gives too feminine and turns them off. Females love a man that, looks like a man and has masculine features so avid to over-dress.



### 9. Proper Fitted Outfits

Finding properly fitted outfits is most important to show your manly personality.



Properly fitted garments enhance your look as well as gain the attention of your girl. Roll up your sleeves if you have muscular biceps gaining all focus of your girl on you. Females are always attracted to muscular men.

### 10. Accessories to impress girls

Women have lots of choices in accessories for grooming themselves compare to males. Here are some essential add-ons.

#### *Essential add one's – Watch*

According to research women are much attracted to leather belt watch. It has the ability to add a little sophistication and class to your look. Remember your watch matches your outfits.

#### *Essential to add one's – Belt*

The bigger the belt buckle the less attractive it is, the bigger the buckle imbalance the whole look, and it grabs all attention on it. Select belts have a normal belt buckle design.

#### *Essential add one's – Footwear*

Footwear is not an element that covers your feet, but more than that. Shoes are an important fashion element that turns your simple outfits into a bold fashion statement. Converse and loafers shoes are in trend. But to impress your girl, go for formal shoes.

I hope you guys like ideas on how to dress to impress a girl. Being a cool dude, try to be a man of class and elegance. Your simplicity, confidence, and soberness would definitely make your girl impress. I hope you guys also enjoy reading on Shahid Kapoor Style Decode – Trend For Men at 40.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# கெட்ட கொழுப்பில் இருந்து இதயத்தைப் பாதுகாக்கும் ஐந்து உணவுப்பொருள்கள்



மனித உடலில் தங்கியிருக்கும் அதிகளவிலான உடற்கொழுப்பு அல்லது தீய கொலஸ்ட்ரால் அளவை சரியான உணவுப்பழக்கத்தின் மூலமாக சரிசெய்ய லாம் என்கின்றன ஆய்வுகள். உடலில் சேரும் அதிக கொழுப்பு, ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் போன்றவற்றிற் கான அபாய அளவினை அதிகரிக்கிறதாம்.

'ஹைப்பர்கொலஸ்ட்ரோலெமியா' என்கிற மருத் துவப் பெயரால் அழைக்கப்படும் அதிகப்படி கொலஸ்ட் ரால், ரத்தக்குழாய்களில் எக்கச்சக்கமாக கொழுப்பு மற்றும் எடைகூட்டும் பொருட்கள் சேர்வதால் ஏற்படுகி றது. இதனால் உடல் ரத்த ஓட்டம் குறைந்து, நெஞ்சு வலி, திடீர் வலிப்பு நோய் போன்றவற்றிற்கான ரிஸ்கை அதிகமாக்குகிறது. எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உடலில் சேரும் இந்த கொலஸ்ட்ரால் அளவினை ரத்த மாதிரி ஆய்வின் மூலம் மட்டுமே கண்டறிய முடியும்.

கொலஸ்ட்ராலைக் குறைக்கும் உணவுகளை சரியான முறையில் உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமாக இதயத்தின் ஆரோக்கியத்தை கெட்ட கொலஸ்ட்ராலிடம் இருந்து காப்பாற்ற முடியும்.

ஹோல் க்ரைன்ஸ் எனப்படும் ஓட்ஸ், தினை, பார்லி போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில் உள்ள பீட்டா குளுகன் உடலில் சேரும் கெட்ட கொழுப்பினை அழிக்க கூடிய திறன் கொண்டது.

பீன்ஸ், பட்டாணி, சிவப்பு ராஜ்மா போன்ற பருப்பு வகைகள் புரதச்சத்து வாய்ந்தவை. இதயத்தை பாதிக்கும் ரத்தக் கொதிப்பு, ரத்தக் கொழுப்புக் கட்டிகள் ஆகியவற்றை குறைக்கும் தன்மை கொண்டவை.

பாதாம், வால்நட், வேர்க்கடலை போன்ற நட் வகைகளையும் உணவில் சரிவிகித அளவில் சேர்த் துக்கொள்வது நன்மை பயக்கும். நல்ல கொழுப்பை உற்பத்தி செய்யும் தன்மை கொண்ட இவற்றால், இதயத்திற்கும் நலம். நார்ச்சத்து, மினரல்களையும் அதிகம் கொண்ட உணவுப்பொருள்கள் இவை.

பூண்டில் இருக்கும் மருத்துவகுணம் உடலின் கொழுப்பை குறைக்கும் சக்தி வாய்ந்தது என்கின்றன அறிவியல் ஆய்வுகள். பூண்டில் இருக்கும் அல்லிசின் என்னும் வேதிப்பொருள், உடலில் காணப்படும் கொழுப்புப்புரதத்தை குறைத்து, இதயத்தைக் காக்கக் கூடியது.

பெரிஸ் எனப்படும் பழவகைகள் நார்ச்சத்து அதி கம் கொண்டவை. சிவப்பு ராஸ்பெரிஸ், இனிப்பு செரி, ப்ளூபெரி, ஸ்ட்ராபெரி ஆகியவை உடலின் கொழுப்பை சமநிலைப்படுத்தக்கூடியவை என்கிறது ஆய்வொன்று. ஆன்டிஆக்சிடண்ட் நிறைந்த இவற்றை டயட்டில் சேர்த்துக்கொள்வது நல்லது.

எனினும், சரியான உணவு முறையுடன் மருத்து வரின் ஆலோசனையும் உடலில் கெட்ட கொழுப்பு சேர்வதில் இருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள மிக அவசியம் எனப்து குறிப்பிடத்தக்கது.

## வயிற்றுப்போக்கை குணப்படுத்த இயற்கை மருத்துவம்

அதிக காரமுள்ள உணவுப்பொருட்களை சாப்பிடு வதால் ஏற்படும் அல்சர் மற்றும் மன உளைச்சல் காரணமாக வயிற்றுபோக்கு ஏற்படும். உணவு ஒவ்வாமை, உணவு விஷமாதல், பாற்றீரியா அல்லது வைரஸ் தொற்று, வயிற்றில் ஒட்டுண்ணிகள் பரவுதல் ஆகியவை காரணமாக அமைகின்றன. உணவு விஷ மாவது, அதிகளவில் ஏற்படும் பாதிப்பு. விஷமாகிப் போன உணவைச் சாப்பிட்ட இரண்டு முதல் 34 மணி நேரத் திற்குள், கடுமையான பாதிப்பு துவங்கி விடும். வயிற் றுப்போக்கால் இரு முக்கிய பிரச்சினைகள் ஏற்படும். ஒன்று நீர்ச்சத்துக் குறைபாடு, மற்றொன்று ஊட்டச் சத்துகளை இழப்பது. சாப்பிட்ட உணவு செரிக் காமல் போவதால், உடலுக்குத் தேவையான ஊட்டச்சத் துகள் கிடைக்காது. இதை ஈடுகட்ட, ஏற்கெனவே உடலி லிருக் கும் சத்துகள் அனைத்தும் பயன்படுத்தப்படும். இத னால் உடலிலுள்ள சத்துகள் தீர்ந்துபோய், ஊட்டச் சத்து குறைபாடு ஏற்படும்.

**மாதுளை**

மாதுளையின் துவர்ப்புச் சக்தி வயிற்றுப்போக்கை நிறுத்த அதிக அளவில் உதவும். மாதுளையின் ஜூஸ் மட்டுமல்ல அதன் விதை கூட வயிற்றுப்போக்கிற்கு நல்லது தான். வயிற்றுப்போக்கு ஏற்படும் போது மாது ளைப் பழம் ஜூஸ் குடித்தால் நல்லது. ஒரு நாளைக்கு 3 அல்லது 4 டம்ளர் மாதுளை ஜூஸ் குடிக்கலாம். ஜூஸாக குடிக்காமல் பழமாக சாப்பிட்டால் 2 பழம் போதுமானது.

**தேன்**

தேன் ஒரு சிறந்த இயற்கை மருந்தாகும். இது பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் பாதுகாப்பான உணவாகும். தேன் மற்றும் ஏலக்காய் பொடியை வெந்நீரில் கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டு முறை குடித்தால் வயிற்றுப் போக்கு சரியாகும்.

**இஞ்சி**

இஞ்சி அஜீரணத்திற்கு இஞ்சி ஒரு மிகச் சிறந்த மருந்தாகும். இதில் இருக்கும் ஆன்டிபாக்டீரியல் குணம் வயிற்றுப்போக்கை நிறுத்தும். அரை டீஸ்பூன் சுக்குப் பொடியை மோரில் கலந்து நாள் ஒன்றுக்கு 3 அல்லது 4 முறை குடித்தால் வயிற்றுப் போக்கு குணமாகும்.

**மோர்**

மோரில் உள்ள அமிலத்தன்மை செரிமான இயக்கத்திற்கு உதவுகிறது. ஒரு டம்ளர் மோரில் உப்பு, சிறிது ஜீரகப் பொடி, ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் மற் றும் மிளகுத்தூள் சேர்த்து, நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 முறை குடித்தால் வயிற்றுப் போக்கிற்கு நல்லது. இது உடலில் நீர்ச்சத்து குறைபாட்டை சரி செய்ய உதவுகிறது.

**தேயிலை**

தேயிலையால் பிளாக் டீ தயாரித்து அதில் எலுமிச்சை சாற்றைக் கலந்து குடித்தால் விரைவாக வயிற்றுப்போக்கு குணமடையும்.



## மருத்துவக் கதிர்

# குமட்டலைத் தடுக்க இயற்கை மருத்துவம்



குமட்டல் என்பது நோய் வருவதற்கான ஓர் அறிவிப்பு. குறிப்பாக, வயிறு சரியில்லை என்பதை நமக்குத் தெரிவிக்கும் எச்சரிக்கை மணியாக இதை எடுத்துக்கொள்ளலாம். உடலிமூளையின் பின்பகுதி யில் உள்ள 'முகுள'த்தில் வாந்தி மையம் உள்ளது. இது தூண்டப்படும்போது வாந்தி வருகிறது. செரிமான மின்மை, வயிற்று புண், ஒவ்வாமை, காய்ச்சல் போன்றவற்றால் குமட்டலும் வாந்தியும் ஏற்படுகிறது.

**எலுமிச்சை**

எலுமிச்சையை பயன்படுத்தி குமட்டலுக்கான மருந்து தயாரிக்கலாம்.

எப்படி செய்வது?

இஞ்சி, சீரகம், எலுமிச்சை, தேன் இதற்கு தேவைப் படும் உட்பொருட்கள். சிறிய நெல்லிக்காய் அளவுக்கு இஞ்சி விழுதுடன், அரை ஸ்பூன் சீரகப்பொடி சேர்க்க வும். ஒரு டம்ளர் நீர்விட்டுக் கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி சிறிது எலுமிச்சை சாறு, தேன் சேர்த்து கலந்து குமட்டல், வாந்தி இருக்கும்போது குடிக்க லாம்.

**கறிவேப்பிலை**

கறிவேப்பிலையை பயன்படுத்தி வாந்தி, குமட்டல், வாதம், காய்ச்சல் போன்றவற்றை குணமாக்கக் கூடிய ஒரு காயத்தை தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள் கறிவேப்பிலையின் காம்புகள். பெரிய நெல்லி இலையின் காம்புகள். வேம்பு இலையின் காம்புகள். முருங்கை இலையின் காம்புகள். இவற்றை ஒன்றாக சேர்த்து லேசாக தட்டி எடுத்துக் கொள்ள வேண் டும். அரை ஸ்பூன் சீரகம் சேர்க்க வேண்டும். சிறிது மிளகு பொடி, சிறிதளவு சுக்கு பொடி, இவற்றுடன் தேவையான அளவு தண்ணீர் சேர்க்க வேண்டும். இவற்றை ஒன்றாக சேர்த்து கொதிக்க விட்டு வடிகட்டி குடிக்கலாம்.

**சர்க்கரை - உப்பு நீர் கலவை**

உடலில் உள்ள சோடியம், பொற்றாசியம், முதலிய பல்வேறு அளவு உப்புகளின் ஏற்றத்தாழ்வுக்கு வழி வகுக்கும் திறனைக் கொண்டிருப்பதால் சர்க்கரை மற்றும் உப்பு நீரின் கலவையை குடிப்பதன் மூலம் உடலை திறமையான செயல்பாட்டு வரம்புக்கு ஏற்ற வாறு சமன் செய்யலாம். இந்த பானம் உடல் நீர் வறட்சி அடையாதவாறு பாதுகாத்து சோர்வடையாமல் காக்கிறது. இது ஒரு இயற்கையான எலக்ட்ரோலாக செயல்படு கிறது.

**இஞ்சி**

ஒரு சிறிய துண்டு இஞ்சியை நசுக்கி தண்ணீரில் சேர்க்கவும். அதனுடன் 1 டீஸ்பூன் தேன் கலந்து அருந்த வேண்டும். இஞ்சி வயிற்றின் எரிச்சலை போக்கி உட னடி நிவாரணத்தை கொடுக்கும். இஞ்சி பித்தத்தை தடுக் கக் கூடியது எனவே இது வாந்தியைக் கட்டுப்படுத்தி வயிறு பிரச்சினைகளில் இருந்து நிவாரணம் அளிக்கும்.





# சூழல் மாசடைதல்




சூழல் என்பது எம்மை சுற்றியுள்ள அனைத்துமே சூழல் ஆகும். இவற்றில் உயிர் உள்ளவை, உயிரற்றவை என அனைத்தும் உள்ளடக்கப்படும் இவ்வாறு எம்மை சூழவுள்ளவற்றால் மனிதன் அதிக நன்மையை பெற்று உயிர்வாழ்கின்றான் அதாவது சூழலின் குழப்பநிலையினாலே பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கிறான்.

சுற்றுச்சூழல் சூழல் மாசடைதல் என்பது மனித செயல்கள் மூலம் உருவாகும்.

மாசுகளால், பூமியின் அடிப்படை கூறுகள் குழப்பமடைகின்றன அதாவது நிலம், நீர், காற்று என்பன சூழலில் வாழும் உயிரினங்களும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சூழலுக்கும் அங்கே வாழ்ந்து வரும் உயிரினங்களுக்கும் கேடு விளைவிக்கக்கூடியவையின் சேர்க்கையால் சூழற் சமநிலை பாதிக்கப்படும்.

கறுப்பு பூஞ்சையை விட வெள்ளை பூஞ்சை ஆபத்தானதா?

முதலாவதாக நீர் மாசடைதலானது மிக முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றன. அதாவது மனிதன் தனது கழிவு பொருள்களை தண்ணீரில் கொட்டுதல், நீரை வீண் விரயம் செய்தல், கிருமிநாசினிகளை பயன்படுத்தும்போது அவை நீரில் கலத்தல், தொழிற்சாலை கழிவுகளை கொட்டுதல், நீருக்கு அடியில் அணுகுண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளல் என்பன பாரியளவில் நீரை மாசடைய செய்கின்றன. இவ் நீர் மாசடைதலால் தொற்று நோய்கள் மற்றும் வறட்சி என்பன அதிகரிக்கும் ஆகவே இவ்வாறான நீர் மாசடைதலை தடுக்கும் வழிகளாக மழை நீரை சேமித்தல், குப்பை கூழங்களை கொட்டுவதை தடுத்தல், நீர் மாசடையும் விதத்தில் செயற்படுவோரின் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுத்தல், மாணவர்கள் மற்றும் மக்களுக்கு நீரின் முக்கியத்துவம் மற்றும் சரியான முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை வழங்குதல் அத்துடன் சர்வதேச ரீதியில் சட்டங்களை அமுல்படுத்தல்.

அடுத்ததாக நிலம் மாசடைதல் முக்கியமான ஒரு பிரச்சினையாகும் கனியன்களின் சேர்க்கை மண் எனப்படும். இவை மண் அகழ்தல், காடுகளை அழித்தல், குப்பை கூழங்களை நிலத்தில் போட்டு புதைத்தல் உதாரணமாக பிளாஸ்ட்ரிக் பொருள்கள் மற்றும் அணுகுண்டு பரிசோதனைகள், உள்நாட்டு யுத்தம், விவசாயத்திற்கு கிருமிநாசினிகள் பயன்படுத்தல், இரசாயன பசளை பயன்படுத்தல், பாரிய அனர்த்தங்கள் ஏற்படல் உதாரணமாக சுனாமி, நிலநடுக்கம், மண்சரிவு, எரிமலை என்பனவற்றை குறிப்பிடலாம்.

அதே போன்று இவ்வாறான பாதிப்புகளால் நிலம் வளம் இழந்து விடும் இதனால் விவசாயம் பாதிக்கும், உணவு பஞ்சம் ஏற்படும், வறட்சி, வெப்ப அதிகரிப்பு ஏற்பட்டு தொற்று நோய்கள் உருவாகும்.

இவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளாக, காடுகளை அழிப்பதை தடுத்தல், மண்பாதுகாப்பு திட்டங்களை முன்மொழிதல், மக்களுக்கு விழிப்புணர்வூட்டல், இயற்கை பசளைகளை பயன்படுத்தல், சுழற்சி முறையில் விவசாயத்தை மேற்கொள்ளல் என்பனவற்றை பொதுவாக குறிப்பிடலாம்.



அடுத்ததாக வளி மாசடைதலை குறிப்பிடலாம் வளி என்பது எம்மை சூழவுள்ள வளிமண்டலமாகும். இவ் வளி மண்டலமானது மனிதன் மற்றும் எல்லா உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்குரிய முக்கிய கூறு ஆகும் இந்த உலகமே தங்கியிருப்பது இந்த வளிமண்டலத்தாலேயே தான் இருப்பினும் காடுகளை அழித்தல், அணுகுண்டுகளை பரிசோதனை செய்தல், கிருமி நாசினிகளின் பயன்படுத்தல், அணுகுண்டுகளை பயன்படுத்தல் மற்றும் பரிசோதனை செய்தல் என்பவற்றால் அதிகளவு வளி மாசடைந்து வருகின்றது. இதனால் இவற்றின் பாதிப்புகள் எண்ணில் அடங்காதவை உலகில் சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப தொழில்நுட்பமும் விருத்தியடைந்து வருகின்றது தொழிற்சாலைகளின் கழிவு வாயுக்கள் வகை புகை, அணுகுண்டு தாக்குதல், விண்வெளி பயண முயற்சி மற்றும் காடுகளை அழித்தல் என்பன அதிகமாக வளியை மாசடைய செய்கின்றன.

## செய்ந்நன்றி மறவோம்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா - நின்று தளரா வளர் தெங்கு தாளுண்டநீரைத் தலையாலே தான் தருதலால்

என்று செய்ந்நன்றி மறவாமைக்கு எடுத்துக்காட்டு கூறுகின்றார் ஔவையார்.

ஒருவர் செய்த நன்றியை நாம் உயிருள்ளவரை மறத்தல் கூடாது. செய்யப்பட்ட உதவி சிறிதாயினும் அதனை நாம் பெரிதாக மதித்துப் போற்றுதல் வேண்டும்.

தென்னம்பிள்ளைக்கு நீர் ஊற்றி வளர்க்கிறோம். அது உடனே நமக்குப் பயன் தரும் என்று எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அது வளர்ந்ததன் பின்னர் அடி வேர்களினால், தான் உண்ட நீருக்குப் பதிலாக இனிமையான இளநீராக நமக்குத் தந்துதவுகிறது. தாளுண்டநீரைத் தலையாலே தருகின்றது என்கிறார் ஔவையார். எனவே பயனை எதிர்பார்த்து நாம் பிறருக்கு உதவிசெய்தல் கூடாது. பயன் கருதாது செய்யும் உதவியே உதவியாகும்.

பிறர் நமக்குச் செய்யும் சிறிய உதவியையும் நாம் மறக்கக்கூடாது. சிறிய உதவியேயாயினும் தக்க தருணத்தில் அது நம்மைக் காத்திட உதவிடலாம். எனவே தான் திருவள்ளுவரும் காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது என்கிறார்.

தக்கதருணத்தில் செய்யப்பட்ட உதவி சிறிதாயினும் அது இப் பூமியிலும் பெரிதாகக் கருதிப் போற்றப்படவேண்டும் என்பது வள்ளுவர் வலியுறுத்தும் கருத்தாகும்.

இதனை ஒரு உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ளலாம். தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்கு எவ்வளவு பொன்னைக் கொடுத்தாலும் அவனது தாகம் தணியப் போவதில்லை. அவ் வேளையில் அவனுக்குச் சிறிதளவு நீரைக் கொடுத்தாலே போதுமானது. அவ்வேளையில் அச்சிறிதளவு நீரின் பெறுமானம் பொன்னைவிட உயர்ந்த பெறுமானம் மிக்கதாகும்.

இதன் மூலம் தக்க தருணத்தில் செய்யும் உதவியே மிகமிகப் பெரியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

நமது பெற்றோர் கைம்மாறு கருதாது நமக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்கிறார்கள். அவர்கள் செய்த உதவிகளை நாம் வாழ்நாள் முழுவதும் நன்றியுடன் போற்ற வேண்டும். அவர்களைக் கண்கண்ட தெய்வங்களாக மதிக்க வேண்டும். இதனாலேயே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என ஆன்றோர்கள் சொல்லி வைத்தனர்.

பிறர் நமக்குச் செய்த உதவியை ஒரு போதுமே மறக்கக்கூடாது. எதனையும் நாம் மறந்து போகலாம். ஆனால் செய்ந்நன்றியை நாம் மறத்தல் ஆகாது.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு என்னும் வள்ளுவர் வாக்கும் இதனையே வலியுறுத்துகிறது.

நன்றிமறவாது நல்லவர்களாக வாழ்வோம்.

# கல்விக்கதிர்



- அகரன் -

## விஞ்ஞானத்தின் வளர்ச்சி



விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று எமக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மனிதன் கருவிலே தோன்றிய காலத்திலிருந்து அவனது ஆயுள் முடிந்த பின்பும் விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காண்கிறோம். கல்லையும் கல்லையும் உரசி தீயைக் கண்டு பிடித்ததிலிருந்தே மனிதனின் கண்டுபிடிப்புக்கள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவிய ரீதியில் வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் செய்து கொண்டிருக்கின்றது. மருத்துவத்துறையில் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும், கண்டுபிடித்த பின் அவற்றை குணப்படுத்துவதற்கும், விஞ்ஞான உபகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனால் இன்று இறப்புக்கள் குறைந்து மக்களது வாழ்க்கைத் தரம் உயர்கின்றது. வருமுன் காப்பது சிறந்ததல்லவா? இதற்கும் விஞ்ஞான தொழிநுட்பக் கண்டுபிடிப்புக்களும், மருத்துவ ஆராய்ச்சி முடிவுகளும் உதவுகின்றன.

கல்வித்துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியது. தொலைக்காட்சி, வானொலி மட்டுமன்றி கணனியின் உபயோகம், கல்விக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் யாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகளேயாகும்.

போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் ஆற்றிவரும் சேவை குறிப்பிடக்கூடியது. பரந்த உலகம் இன்று சுருங்கியது போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாலேயாகும். உலகின் எப்பாகத்திலிருந்தும் நினைத்தவுடன் நினைத்தவிடத்திற்கு சென்றுவிடக் கூடியதாயிருப்பது விரைவான போக்குவரத்து வசதிகளினாலேயாகும். விண்வெளிப் பயணங்களும், கோள்கள் வானமண்டலங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் விஞ்ஞானத்தின் விருத்தியினாலேயாகும்.

விவசாயத்துறையில் நவீன முறைகள் புகுத்தப்பட்டு விளைச்சல் பெருகியிருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்பட்டு தவிர்க்கப்படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன. விளைபொருள்கள் விளைந்தபின் நவீன முறைகளில் அறுவடை செய்யப்படுவதுடன், நீண்டகாலத்திற்கு கெட்டுப் போகாமல் நவீன முறைகளில் பாதுகாக்கப்படுகின்றன. சமையலிலும் இன்று அடுப்புக்கள், மின்சாரத்தினால் இயங்கும், இடிக்கும், அரைக்கும் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விளையாட்டுத் துறையிலும், பொழுதுபோக்குத் துறையிலும் இன்று நவீனமயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று பெருமளவிற்கு விஞ்ஞானத்தின் உதவியால் விரைவாகவும், இலகுவாகவும் செய்து முடிக்கப்படுவதுடன் பொருள்களின் உற்பத்தியும், தரமும் உயர்ந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் நன்மை புரிந்துவரும் விஞ்ஞான வளர்ச்சியே சில சந்தர்ப்பங்களில் மனிதனின் அழிவுக்கும் காரணமாகி விடுகின்றது. போர் ஆயுதங்கள், அணுஆயுதங்கள், யுத்த விமானங்கள், யுத்த கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் என மனிதகுலத்தின் பேரழிவுக்கு வழிவகுக்கும் இவையும் விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களே. இவை இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் அழிவினை விளைவித்து வருவதனை வேதனையுடன் கண்டுவருகின்றோம். தீயவற்றை விடுத்து நல்லனவற்றைப் பகுத்தறிந்து, அன்னப்பறவை நீரைத் தவிர்த்துப் பாலை அருந்துவது போல் நாமும் விஞ்ஞானம் தரும் நன்மைகளைப் பயன்படுத்தி நன்மை பெறவேண்டுமே ஒழிய தீயனவற்றிற்கு இடம் தரக்கூடாது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனிதகுலத்தின் நல்வாழ்விற்கு பயன்பட வேண்டும். விஞ்ஞானத்தின் துணையுடன் வாழ்வு வளம்பெற வேண்டும். எனவே விஞ்ஞானத்தின் விருத்தி நல்ல வழியில் பயன்படுத்தப்பட வேண்டும்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# “சவால்களை எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிக்கவர்கள் நிலையான தடம் பதிப்பார்கள்”

## நேர்காணல்

## கவிஞர் மோகனா கௌரிதாசன் உடனான நேர்காணல்

### நேர்கண்டவர் - திருமலை தட்சா




**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

கிண்ணியா ஆலங்கேணி என்ற அழகிய கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட மோகனா கௌரிதாசன் ஆகிய நான் கவிமணி கௌரிதாசன், மோகனஸ்வரியின் சிரேஷ்ட புதல்வியாவேன். நான் படித்த பாடசாலை தி/ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம். கலைத்துறையில் ஈடுபட்ட காலம் (பாடசாலை வாழ்வு) 1997 காலப்பகுதி. பொது ஈடுபாடுகளாக பிரதேச செயலக கலாசார குழுவில் உறுப்பினராகவும், அருள்மிகு ஆலங்கேணி விநாயகர் ஆலய பரிபலான சபையில் செயலாளராகவும், தேடல் கலை இலக்கிய அமைப்பின் நிறுவனராகவும் அங்கம் வகிக்கிறேன்.

**02) கவிதைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும், அதனூடான பயணம் குறித்தும்?**

சிறு வயதிலிருந்தே வாசிப்பு மீதான ஆர்வம் எனக்குள் இருந்தது.சிறு வயதில் கவிதை எழுதும் ஆர்வம் இருந்தாலும் பாடசாலை வாழ்வில் எனது தந்தை எழுதிய ஆக்கங்களை தான் நான் வெளிப்படுத்தி வந்துள்ளேன். பின்னர் எனது 15ஆவது வயதில் திருமலையில் கல்வி பயின்ற வேளை தான் முதன் முதலில் (தமிழ்) எனும் தலைப்பில் ஒரு கவிதையை எழுதி மாணவர் மன்றத்தில் பாடி பாராட்டு பெற்றேன். கவிதை, பேச்சு ,எழுத்தாக்கம் என பல்வேறு போட்டி களில் பங்கேற்று வெற்றியீட்டியுள்ளேன். பாடசாலை வாழ்விலேயே (விடி சேவல் கலை இலக்கிய மன்றத்தித்தினால்)கிடைத்த முதலாவது பட்டம் இளங்கவி என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**03) இதுவரையில், எழுத்துத் துறையில் உங்களது படைப்புகள் குறித்து?**

தேடல் கலை இலக்கிய அமைப்பின் நிறுவுனரான நான் இவ்வமைப்பின் மூலமாக 'தேடல் விழுதுகள்' எனும் கவி நூலை 2018 ஆம் ஆண்டில் எனது தகப்பனாரை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளியீடு செய்தேன். கவிதைகள், சிறுகதைகள் என ஒன்று சேரக் கலந்த நூலாகவும் இலங்கை, இந்தியப் படைப்பாளிகளின் ஆக்கங்களைக் கொண்டதாகவும் இந்நூல் விளங்குகிறது. இவ்வமைப்பினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் ஆக்கங்களே இதில் உள்ளடக்கம் பெற்றுள்ளன.

தேடல் கலை இலக்கிய அமைப்பினால் (தேடல்) எனும் பெயரில் சஞ்சிகை 5ஐ வை.கே.ராஜ் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளியிட்டுள்ளேன். எனது ஈரம் தேடும் வேர்கள் கவிதை நூல் விரைவில் வெளியீடு செய்யவுள்ளேன்.

**04) உங்களது கிராமத்தில் பெண்கள் மத்தியிலான கலைத்துறை ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

எங்கள் கிராமத்து பெண்கள் கலை மீது ஆர்வம் கொண்டு இருந்தாலும் அவர்கள் எழுத்துத் துறையில் காலடி பதிக்க இதுவரையில் முன்வரவில்லை. ஏனெனில் அவர்களுக்கு இதுவரை காலமும் சரியான வழி காட்டல் இல்லை (சில அமைப்புகள் இலக்கியப் போட்டிகளை நடாத்தி வந்தாலும் அவை தொடர்ந்து செயற்படாத காரணமும் தான்) தற்போது தேடல் கலை இலக்கிய அமைப்பின் ஊடாக அதை செய்வதற்கு முயன்றிருக்கிறேன். எனது ஊர் பெண்களில் நான் தான் முதன் முதலாக இலக்கியத் துறையில் ஈடுபட்டு வருகிறேன் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

**05) தங்களது தந்தையார் நாடறிந்த மூத்த மரபு வழிக் கவிஞராவார். அந்த வகையில், அவரின் வழிகாட்டலுடன் கூடிய பரம்பரையின் தொடர்ச்சி உங்களை எவ்வாறு ஊக்கப்படுத்துகின்றது?**

கவி பரம்பரையில் உதித்த எனக்கு இயற்கையிலேயே கவியாற்றலும், கவித்திறனும் உண்டு. புதுக்கவி, மரபு வழிக் கவி எழுதுவதில் தந்தையைப் போல் எனக்கும் ஆர்வம் உண்டு. என் கவி பயணத்துக்கு தந்தையாரின் ஆதரவு நிறையவே இருக்கின்றமையாலும் என் எழுத்துக்கள் எளிமையாக, அழகாக, கனதியாக அமைந்திருப்பதால் பலராலும் பாராட்டப்படக் கூடியதாக விளங்குகின்றன. கவியுலகில் எனது பெயர் நிலைத்தும் நிற்கின்றது என்பேன். சொற் பஞ்சமில் லாத சந்தக் கவிஞனின் மகள் என என் கவிகள் நிரூ பித்து நிற்கின்றன. என்றும் கவிதைகளால் வாசகர்களை தன்பால் ஈர்த்தெடுக்கும் சக்தி எனக்குள் நிறையவே அமைந்திருப்பதில் கவிதைக்குரிய அழகியல் அம்சங் களை இவரது படைப்புகள் வெளிப்படுத்துகின்றன என்றும் பலராலும் பாராட்டப்பட்டும் இருக்கிறேன்.

எனது அனுபவச் சுவடுகளை கவிகளாக்கிப் பாடுவதிலும் மிகை கற்பனை, ஒப்பனை இல்லாமல் கவிக்கான வீச்சுடனும், வீரியத்துடனும் பாத்திரட்டி படித்துச் சுவைக்கத் தரும் வல்லமையுடனும் திகழ்கிறேன் என்பதை என் கவிதைகள் பேசும்.

தேடல் கலை இலக்கிய அமைப்பின் நிறுவுனராக விருந்து இலக்கியப் பணிபுரியும் மோகனா கௌரிதாசன் ஆகிய நான் நாம் வாழ்ந்த வாழ்வின் பதிவுகள் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வரலாற்று ஆவணமாக கிடைக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்படுகிறேன்.

**06) திருகோணமலை மாவட்டத்தில் இளம் எழுத்தாளர்களின் வருகையும், சமூக மத்தியில் அவர்களுக்கான வரவேற்பும் எவ்வாறு உள்ளது?**

திருகோணமலையில் இளம் எழுத்தாளர்களின் வருகை அதிகமாகவே காணப்படுகின்றது. இருந்தாலும் சமூகத்திலே அவர்களுக்கான அங்கீகாரம் என்பது குறைவாகவும், அவர்களுக்கான வரவேற்பு என்பதும் மிகக் குறைவாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் அவர்களது படைப்புக்கள் வெளிக்கொண்டு வரப்படாமை மற்றும் அவர்களுக்கான சரியான வழிகாட்டல் இல்லாமை.

**07) இத்துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள்?**

எழுத்துத்துறையில் பெண்ணாயிருந்து நான் எதிர்கொண்ட சவால்களாக இத்துறையில் ஒரு பெண் பிரகாசிப்பதனால் அவளது குடும்பப் பின்னணி காத்திருக்க வேண்டியது மிக அவசியமாகிறது. தந்தை, தாய், உடன்பிறப்புக்கள் மேலான ஒத்தாசை வழங்க வேண்டும். அதேபோல் திருமணமானவளாயின் அவளது கணவன் மற்றும் அவரது உறவுகளும் ஒத்தாசை புரிய வேண்டும். இல்லையேல் அவர்கள் எழுத்துத் துறையில் ஈடுபாடு காட்ட முடியாது. இப்படியே பார்த்தோமானால் பல்துறை எழுத்தாளர் பலர் திருமணத்துக்குப் பின் காணாமல் போயிருக்கிறார்கள். மேற் குறிப்பிட்ட வாய்ப்பு பெண் எழுத்தாளர்களுக்குக் கிடைக்கப் பெற்றாலே அவர்களால் நிலைத்து நின்று பிரகாசிக்க முடியும்.

இது தவிர பெண் எழுத்தாளர்களைப் பொறுத்த வரையில் பல்வேறு கட்டுப்பாடுகள், இடையூறுகள், தடைகள், கண்டிப்புக்கள் என்பவற்றுக்கெல்லாம் முகம் கொடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இத்தகைய நெருக்கடிகளில் இருந்து சாமர்த்தியமாக வெளிவந்த பல பெண் எழுத்தாளர்கள் இன்னும் நிலைத்து நிற்கிறார்கள். ஒரு நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும் வேளை பல்வேறு கேள்விக்கணைகளுக்கு விடை கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலையும் பெண் எழுத்தாளர்களுக்குத் தடை போடுவது வெளிச்சம். இதுபோல பல்வேறு விமர்சனங்களையும் இயலாமை மிக்கவர்கள் ஆற்றாமையால் வழங்குவதும் பெண் எழுத்தாளர்களின் இலக்கிய முன்னேற்றத்துக்கு குந்தகம் விளைவிக்கின்றதென்பதனைக் கூறாமலிருக்க முடியாது. அத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும் நெஞ்சுரம் மிக்கவர்கள் நிலையான தடம் பதிப்பார்கள்.

**08) தற்சமயம் சமூகத்தின் மத்தியில் எவ்வாறான கலை, இலக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

தேடல் கலை இலக்கிய அமைப்பினால் பல போட்டிகளை நடாத்தி அவர்களுக்கான வெற்றிச் சான்றிதழ், விருதுகளை வழங்கி எழுத்தாளர்களை ஊக்குவித்து வருகிறேன். அத்தோடு கவிஞர்களின் நூல்களை வெளியீடு செய்ய அனுசரணை வழங்குவதோடு, சமூக சேவைகளையும் செய்து வருகிறேன். அத்தோடு கவியரங்குகள், நூல் வெளியீடுகள், இலக்கிய விழாக்கள் என்பவற்றில் தவறாது பங்கேற்று வருகிறேன்.

**09) இதுவரையில் கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து?**

விடிசேவல் கலை இலக்கிய மன்றத்தினால் இளங்கவி பட்டமும், தேனீ கலை இலக்கிய மன்றத்தினால் 'கவித்தேன்' விருதும், புத்தொளி இலக்கிய மன்றத்தினால் 'கலைமணி' விருதும் இளைய நிலா கலாமன்றத்தினால் கவிப்புனல் விருதும், 2019இல் நுட்பம் குழுவினரால் பொன்னாடை போர்த்தி கௌரவம், முகநூலில் நடைபெற்ற கவிப் போட்டிகளில் 75க்கு மேற்பட்டவற்றில் வெற்றியும், 2021இல் கிண்ணியாப் பிரதேச இலக்கிய கவிதைப் போட்டியில் முதலாமிடமும் பெற்றுள்ளேன். 2022இல் கிண்ணியாப் பிரதேச இலக்கிய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளேன். கலாபூஷணம் பாலமுனை பாரூக்கின் தலைமையில் ஊவா வானொலி கலையரங்கில் நடைபெற்ற கவியரங்க நிகழ்வில் கலந்து கொண்டு கவிபாடி சிறப்புப் பெற்று அதற்கான சான்றிதழும் பெற்றேன். நான் பாடசாலை வாழ்விலும் பல்வேறு பட்ட விருதுகள், சான்றிதழ்களை எனதாக்கிக் கொண்டுள்ளேன்.

**10) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

வாழ்வுக்கும் விடுதலைக்கும் தற்பாதுகாப்பிற்கும் ஒவ்வொரு சராசரி மனிதனுக்கும் பூரண சுதந்திரமுண்டு. என்ற சிந்தனையினை எனது பாடசாலை வாழ்வில் வாய்த்த அதிபர்கள் எனக்கு ஆர்வமுடன் ஊட்டினார்கள். அந்த வகையிலே ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தில் பயின்ற வேளை திருவாளர் சோ.சச்சிதானந்தமும், திருமலை புனித சவேரியார் கல்லூரியில் பயின்ற காலம் திருவாளர். கீதபொன்கலனும் துணிவுடன் வீறுநடைபோடப் பயிற்றுவித்ததன் விளைவாக இலக்கியத்துறையில் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்கக் கூடியதான தன்னம்பிக்கை இயல்பாகவே உருவானது.

சரியெனப்பட்டதை தலை சரியாமல் சொல்ல வேண்டுமென்ற கருத்துக்கு மாற்றுக்கருத்து எனது வாழ்வியலில் என்றும் இருந்ததில்லை. குறிப்பாக பாராட்டப்பட வேண்டிய இடத்தில் பாராட்டப்படுவதும், தவறு நடைபெறும் வேளை காரசாரமாக கண்டிப்பதனையும் எனது கொள்கையாக வகித்துக் கொண்டேன். இதனால் நண்பர்கள் பலபேர் எனது இலக்கியப் பயணத்தில் தொடராது தூரம் போனார்கள். நேர்மையான, உறுதியான அளவு கோலை எனது எழுது கோலாகப் பற்றிக் கொண்டதன் விளை வாக எனது இலக்கியப் பயணத்தின் விரைவு தாமதமாக நேர்ந்தது.

எதையும் அனுசரித்துப் போகவேண்டு மென்ற கட்டாயம் இருந்தாலும் மிகையான அநீதிக்கு துணை போக இயலாதவளாக நான் இருந்திருக்கி றேன். இதனால் மறைமுகமான பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கிறேன். அதே போல ஒரு பெண் ணாக தனித்து நின்று செயற்படுவதின் சிரமங்கள் நிறையவே உண்டு என்பதை அறிவீர்கள். எனவே இதனைத் தெரிந்து பயணிக்க மறவாதீர்கள் என்பதே எனது பணிவான கருத்து.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# ‘பொன்னியின் செல்வன்’ படித்தது அல்ல, பார்த்தது!

## தலைமுறை தாண்டியும் பேசப்படும் வரலாற்றுப் புனைவு!

- முருகபூபதி -




சில மாதங்களுக்கு முன்னர், நியூசிலாந்திலிருந்து ஊடக நண்பர் சத்தார், மெய்நிகரில் என்னை பேட்டி கண்ட போது கல்கியின் பொன்னியின் செல்வனை நான் இது வரையில் படித்ததில்லை என்று சொன்னதும், அவர் ஆச்சரியமுற்றார்.

அதன்பிறகு, எனது மனைவி மாலதி பொன்னியின் செல்வனை படிக்காத நீங்களும் எழுத்தாளரா?” எனக் கேட்டார்.

ஆம். பொன்னியின் செல்வனைப் படிக்காதமையால் தான் நான் எழுத்தாளனாக இருக்கின்றேன். அந்தத் தொடர்கதையை கல்கியில் படித்தவர்கள் பல ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்கள் எல்லோரும் எழுத்தாளர்களாகிவிட்டார்களா.. ? எனக் கேட்டேன்.

இது குதர்க்க வாதம் என்றார் மனைவி.

மணிரத்தினத்தின் இயக்கத்தில், ஜெயமோகனின் வசனத்தில் கல்கியின் பொன்னியின் செல்வன், நான் வதியும் ஆஸ்திரேலியாவில்



மெல்பன் திரையரங்கிற்கு இம்மாதம் 30 ஆம் திகதி வந்ததும், அதனைக் கதையாக இதுவரையில் படித்திராத, அதனை எழுதிய எழுத்தாளர் கல்கி பற்றி எதுவித குறிப்புகளும் அறியாத 1980 இற்குப்பின்னர் பிறந்த எனது இரண்டு மகள்மாரும் மற்றும் இரண்டு பெறாமகள்மாரும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தை பார்ப்பதற்காக என்னைத் தனித்தனியாக அழைத்தனர்.

இதில் என்ன ஆச்சரியம் என்றால், நான் மெல்பனில் வசிக்கும் புறநகரமான மோர்வெல் பிரதேச திரையரங்கில், இதற்கு முன்னர் எந்தவொரு தமிழ்த் திரைப்படமும் காண்பிக்கப்படவில்லை. அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மருத்துவரான ஒரு பெறாமகள் அங்கிள், பொன்னியின் செல்வன் பார்ப்போம் வாருங்கள் என்றார்.

மெல்பன் நகருக்குள் வசிக்கும் எனது மூத்த மகள் அழைத்துவிட்டாள், அவளுடன் மெல்பனில் பார்க்கச் செல்கிறேன் என்றேன்.

இவ்வாறு பொன்னியின் செல்வன் திரைப்படம்



எங்கள் குடும்பத்திற்குள் கொண்டாடப்பட்டது.

இதற்கு வசனம் எழுதிய எழுத்தாளர் ஜெயமோகன், 2009 ஆம் ஆண்டளவில் எங்கள் வீட்டில் தமது துணைவியார் அருண்மொழியுடன் தங்கி நின்றபோது, மற்றும் ஒரு எழுத்தாளரும் வந்திருந்தார். அவர் இலங்கையிலிருந்து வருகை தந்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்.

ஜெயமோகன், ஆர்யா நடித்த நான் கடவுள் திரைப்படத்திற்கு வசனம் எழுதிய காலப்பகுதியில் வந்திருந்தார். தெளிவத்தை ஜோசப் வி. பி.கணேசன் தயாரிப்பில் முன்னர் வெளியான ‘புதிய காற்று’ திரைப்படத்திற்கு வசனம் எழுதியவர். இத்திரைப்படத்தில் மனோ கணேசனும், அவரது தம்பி பிரபா கணேசனும் குழந்தை நட்சத்திரங்களாக நடித்திருப்பர்.

எங்கள் மெல்பன் வீட்டின் நூலகத்திலிருந்த முள்ளும் மலரும் மகேந்திரன் எழுதிய சினிமாவும் நானும் என்ற நூலை ஜெயமோகன் எடுத்துப் பார்த்து அதன் பக்கங்களை புரட்டினார்.

அதில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தன்னை வீட்டுக்கு அழைத்து மூன்று மாதங்கள் தங்க வைத்து கல்கியின் பொன்னியின் செல்வனுக்கு திரைக்கதை வசனம் எழுதவைத்த கதையை மகேந்திரன் சொல்லியிருப்பார்.

மணிரத்தினம் இயக்கிய கடல் திரைப்படத்தில் சில காட்சிகளை இலங்கையிலும் எடுக்கும் எண்ணம் இருந்தது. ஆனால், இலங்கை செல்லும் தமிழக எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு எதிராக தமிழ் உணர்வாளர்கள் கண்டனம் எழுப்பியமையால், அந்த முயற்சியும் மணிரத்தினத்திற்கு கைகூடவில்லை. கடல் திரைப்படத்திற்கும் திரைக்கதை வசனம் எழுதியவர் ஜெயமோகன்.




பொன்னியின் செல்வனுக்காகவும் திரைப்படக்குழு இலங்கை வரவிருந்தது. ஆனால், கொவிட் பெருந்தொற்று அவர்களை பாலித்தீவை நோக்கி நகர வைத்தது.

மணிரத்தினத்தின் இரண்டாவது விருப்பமும் நிறைவேறவில்லை. இத்தனைக்கும் பொன்னியின் செல்வனை தயாரித்தவர் லைக்கா நிறுவனத்தை நடத்தும் இலங்கையரான சுபாஸ்கரன்.

மக்கள் திலகம் பொன்னியின் செல்வனை அன்று கல்கி கிருஷ்ணமூர்த்தியின் புதல்வர் கி. இராஜேந்திரனிடம் இந்திய நாணயத்தில் ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்து வாங்கியிருந்தார்.

அதில் வந்தியத்தேவனாகவும் எம்.ஜி.ஆர். நடிப்பதற்கு விரும்பியிருந்தார். பின்னாளில் நடிகர் கமல்ஹாசனும் பொன்னியின் செல்வனை தயாரித்து நடிக்க விரும்பியிருந்தார்.

மருதநாயகம் திரைப்படத்தை பெரும் பொருள்செலவுடன் தயாரிக்க முனைந்து பின்னர் கைவிட்டவர் கமல்.

தற்போது வெளியாகியிருக்கும் மணிரத்தினத்தின் பொன்னியின் செல்வனில் குரல் கொடுத்துள்ளார் கமல். உலகெங்கும் திரையரங்குகளுக்கு வருமுன்னர், தயாரிப்பாளர், இயக்குநர், கதை வசன கர்த்தா மற்றும் பங்கேற்றதொழில்நுட்பக் கலைஞர்கள் உட்பட நடித்த நட்சத்திர பட்டாளம் பங்கேற்ற மேம்பாட்டு நிகழ்ச்சியையும்(Promotion programme) மகள்மாருடன் சேர்ந்து பார்த்தேன்.

அவர்கள் கல்கி பற்றியும், பொன்னியின் செல்வன்கதையின்பின்னணி வரலாற்றையும் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் காண்பித்தனர்.

அவர்களுக்கு 1973 ஆம் ஆண்டுவெளிவந்த தமிழின் முதல் சினிமாஸ்கோப் திரைப் படம் ராஜ ராஜ சோழன் பற்றியும் சொல்லநேர்ந்தது.

குறிப்பிட்ட ராஜராஜ சோழன் திரைப்படத்தில் அந்தப் பாத்திரமாகத் தோன்றிய நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சிபாரிசில், இலங்கை நடிகர் ரீசங்கருக்கு ஈழத்து புல




வர் வேடம் தரப்பட்டது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்தக்காட்சி மறைந்துவிடும்.

சோழ சாம்ராஜ்யத்திற்கும் இலங்கைக்குமிடையே தொடர்புகள் இருந்தமையால்தான், கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொன்னியின் செல்வனை எழுதிய காலப்பகுதியில் (1950 – 1955) ஓவியர் மணியம் அவர்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, இலங்கையில் அநுராதபுரம், பொலன்னறுவை, தம்புள்ளை முதலான இடங்களுக்கும் வந்தார்.

ஓவியர் மணியமே பொன்னியின் செல்வன் தொடர்கதைக்கு ஓவியம் வரைந்தவர். ஆயினும் மணிரத்தினம் இலங்கை வந்து படப்பிடிப்பு நடத்த முடியாது போய்விட்டது. எனினும் திரைப்படத்தில் இலங்கை உச்சரிக்கப்படுகிறது. இலங்கை சம்பந்தப்பட்ட காட்சிகள் பல வருகின்றன.

சிங்களத்திலும் வசனங்கள் இடம்பெறுகின்றன. பௌத்த பிக்குகளாக பலர் தோன்றுகிறார்கள்.

இலங்கை சிங்கள திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதானகே அவர்களுக்கும் எழுத்தோட்டத்தில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)






தெளிவத்தை ஜோசப், ஜெயமோகன்




# அறநெறி போதித்த காந்தி மகான்

இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட இந்தியாவின் 'தேசத் தந்தை' என்று அழைக்கப்படும் மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த தினத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 2 ஆம் திகதியை 'காந்தி ஜெயந்தி' ஆகக் கொண்டாடுகிறோம்.

இவ்விழா, அனைத்து மதத்தவர்களும் வாழும் இந்தியாவில் கொண்டாடப்படும் எண்ணற்ற தேசிய விழாக்கள் மற்றும் பண்டிகைகளில் மூன்றாவது தேசிய விழாவாகக் கருதப்படுகிறது.


இந்தியாவில் தேசிய விடுமுறை தினமாகக் கொண்டாடப்படும் இத்தினத்தை, 'சர்வதேச அஹிம்சை தினமாக' உலகம் முழுவதும் கொண்டாடுகிறது.

இந்தியத் தலைவர்களில் எப்போதும் நினைவில் நிற்கும் இவர், அஹிம்சை மற்றும் சத்யாக்ரஹ வழிகளைப் பின்பற்றி, இந்திய நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தமையால், அவ்விரு கொள்கைகளுக்காக உலகப் பிரசித்திப் பெற்றார். இதன் மூலமாக அவ்விரு கொள்கைகளைப் பின்பற்றுவது அவ்வளவு எளிதல்ல மேலும் அக்கொள்கைகளே ஒருவரின் வாழ்வின் இலக்குகளை அடைவதற்கான மிகவும் பயனுள்ள முறைகள் என்பதை நிரூபித்தார்.

அவரின் இந்த நம்பிக்கையே, அனைவரும் அவரை கவனிக்கச் செய்ததோடு மட்டுமல்லாமல், வரலாறு காணாத மிகப்பெரிய சுதந்திரப் போராட்ட வீரர்களுள் ஒருவராகப் போற்றச் செய்தது. அவருடைய தனித்துவமான கொள்கைகளால் உலகளவில் உள்ள பெருந்தலைவர்களான மார்ட்டின் லூதர் கிங், ஜேம்ஸ் லாசன், நெல்சன் மண்டேலா போன்ற பலரும் ஈர்க்கப்பட்டமையால், அவர் இன்றளவும் உலகம் முழுவதும் அனைவரின் மனத்திலும் நிலைத்து நிற்கிறார். இப்படிப்பட்ட பெருந் தலைவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அவரது பிறந்த தினத்தை தேசிய விடுமுறை தினமாக இந்தியா முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.

### காந்திஜி பற்றிய சில தகவல்கள்

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்கள், 1869 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 02 ஆம் நாள், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்ற இடத்தில் கரம்சாந்த் காந்திக்கும், புத்திலிபாய்க்கும் மகனாகப் பிறந்தார். பள்ளியில் படிக்கும்போதே நேர்மையான மாணவனாக விளங்கிய அவர், தன்னுடைய 13 ஆம் வயதிலேயே கஸ்தூரிபாயை திருமணம் செய்துகொண்டார். பதினெட்டு வயதில் 'பாரிஸ்டர்' எனப்படும் வழக்கறிஞர் கல்விக்காக இங்கிலாந்து சென்றார். தன்னுடைய வழக்கறிஞர் கல்வியை வெற்றிகரமாக முடித்து, பாரதம் திரும்பிய காந்தி, பம்பாயில் சிறிது காலம் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1893 ஆம் ஆண்டு ஓர் இந்திய நிறுவனத்தின் உதவியால் தென் ஆப்பிரிக்காவில் பணிபுரிய பயணம் ஆனார். தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரிலுள்ள நீதிமன்றத்தில் தலைப்பாகை அணிந்து வாதாடக்கூடாது எனப் புறக்கணிக்கப்பட்ட நிகழ்வும், ஒரு நாள் பிரிட்டோரியா செல்வதற்காக, இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தபோது, 'வெள்ளையர் இல்லை' என்ற காரணத்தால் பயணம் செய்ய மறுக்கப்பட்ட நிகழ்வும், அவருடைய மனதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனால், 1894 ஆம் ஆண்டு இந்திய காங்கிரஸ் என்ற கட்சியினை தொடங்கி, அதற்கு அவரே பொறுப்பாளரானார். அகிம்சை வழியில் தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்திய மக்களின் பிரச்சினையில் வெற்றிக் கண்ட மகாத்மா காந்தி, இந்தியா திரும்பியதும், ஆங்கிலேயர்களிடமிருந்து நமது நாட்டை மீட்க அஹிம்சை வழியில் போராடினார்.



அதன் பின்னர், இந்தியா திரும்பிய அவர், ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தீவீரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் நோக்கமாக, 1921 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகவும் தேர்தெடுக்கப்பட்டார். 'ரவ்லத் சட்டம்' மற்றும் 'ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு' குரல் கொடுக்கவும், 1919 இந்திய அரசு சட்டத்தில் இந்தியருக்கு வழங்கப்பட்டிருந்த குறைவான அதிகாரங்களை ஏற்க மறுத்தலை வெளிக்காட்டவும், காந்தி 'ஒத்துழையாமையை இயக்கத்தினை' 1922 ஆம் ஆண்டில் தொடங்கினார். இளையத் தலைமுறை மற்றும் தேசியவாதிகளிடையே இந்த இயக்கம் பெரும் ஆதரவைப் பெற்றது. இவ்வியக்கத்தின் வெற்றியால், காந்தி இந்திய தேசிய காங்கிரஸின் தனிப்பெரும் தலைவராக உருவெடுத்தார். பின்னர் 1922இல் உத்திரபிரதேசத்தில் 'சௌரி சௌரா' என்ற இடத்தில் நடந்த நிகழ்வினால் இவ்வியக்கம் கைவிடப்பட்டது.

1930 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு உப்புக்கு வரி விதித்தது. ஆனால், இதனை ஏற்க மறுத்த காந்தியடிகள், 'தன்னுடைய நாட்டில் விளைந்த பொருளுக்கு அந்நியர் வரி விதிப்பதா?' எனக் கருதி, சத்தியாகிர முறையில் இதை எதிர்க்க முடிவு செய்து, 1930 ஆம் ஆண்டு மார்ச் 02 தேதி அகமதாபாத்திலிருந்து சுமார் 240 மைல் தூரத்தில் இருந்த தண்டியை நோக்கி நடைபயணம் மேற்கொண்டார். இதனால், காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் விதித்த உப்பு வரியை திரும்பப் பெற்று கொண்டனர். 'உப்பு சத்தியா கிரகம்' என்ற இந்நிகழ்வு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனக் கூறலாம்.

1942 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8 ஆம் தேதி ஆங்கில அரசுக்கு எதிராக 'ஓகஸ்ட் புரட்சி' என அழைக்கப்படும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தினைத் தொடங்கிய அவரின் மன உறுதியையும், அகிம்சை பலத்தையும் கண்ட ஆங்கில அரசு திகைத்தது. இறுதியில், காந்தியின் இடைவிடாத போராட்டத்தால், 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்திய சுதந்திரப் பிரகடனம் அரங்கேறியது.

### காந்தி ஜெயந்தி விழா மற்றும் கொண்டாட்டம்

காந்தி ஜெயந்தி திருநாளன்று, நமது மக்கள், தேசத் தந்தை அஞ்சலி செலுத்தும் விதமாக பல பிரார்த்தனை சேவைகளையும், சமூக செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து நடத்துவர். இந்திய சுதந்திர போராட்டத்தில் அவரது பங்களிப்பை கௌரவிக்கவும் விதமாக, கலைப்பிரியர்கள் காந்திய கொள்கைகள் மற்றும் சுதந்திரத்திற்காக அவர் கையாண்ட வழிமுறைகளைப் பிரதிபலிக்கும் கண்காட்சிகளை வருடந்தோறும் நடத்தி வருகின்றனர். சில இடங்களில், அஹிம்சை வழியில் செல்வோருக்கு, விருதுகளை வழங்குவர். காந்தியின் வாழ்க்கை மற்றும் அறவழிப் போராட்டங்களை இளந் தலைமுறையினருக்குக் கற்பிக்க எண்ணும் சிலர், பல இடங்களில் காந்தியின் வாழ்க்கை வரலாறு பற்றிய சிறப்பு உரையாற்றுவர்.

### பள்ளி, கல்லூரிகளில் காந்தி ஜெயந்தி

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 2 ஆம் திகதி 'காந்தி ஜெயந்தி' கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளை, தேசிய விடுமுறை தினமாக அரசு பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிய அனைத்திற்கும் அறிவித்திருக்கிறது. மேலும், காந்தியின் பெருமையை உலகமே அறியும் வண்ணம், அக்டோபர் 2 ஆம் தேதியை, 'சர்வதேச அகிம்சை தினமமாக' ஐக்கிய நாடுகள் பொது சபை (UNGA) சமீபத்தில் அறிவித்து, மென்மேலும் காந்திக்கும், காந்திய கொள்கைகளுக்கும் பெருமை சேர்த்துள்ளது. குறிப்பாக, அன்றைய தினத்தன்று நாட்டில் உள்ள அனைத்து மதுக்கடைகளும் மூடப்பட்டிருக்கும். காந்திஜியின் அறநெறிகள் அனைவருக்கும் பரவ வேண்டுமென்று எண்ணி, மக்கள் தங்களது பிரியமானவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பர்.

**காந்தியின் அறவழி சென்று, நாமும் வளமான உலகை மேலும் செழிக்க செய்வோம்!!**

# தமிழ் கூறும் நல்லுலகு என்றுமே மறக்க முடியாத ஒரு வழிகாட்டி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்

## இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு அவர் பணியை உணர்த்துவோம் – 04

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

### உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்களை கொண்டு பல ஆக்கங்கள் எழுதுவித்தார்

தனிநாயகம் அடிகளாரின் தமிழ் கல்சர் - ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் முதலிய ஆங்கில இதழ்களில் உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்களை கொண்டு பல ஆக்கங்கள் எழுதுவித்துள்ளார். உள்நாட்டுக்குள் தமிழ்நாட்டு அறிஞர்களையும் தமிழ்நாட்டைச் சேராத மற்றைய மாநிலங்களைச் சேர்ந்த இந்திய அறிஞர்களையும் வெளிநாட்டுக்குள் இலங்கை மலேசியா மற்றும் வெளிநாட்டு அறிஞர்களையும் தம்முடைய சஞ்சிகைகள் பத்திரிகைகளி



லும் எழுதுவித்தொ பத்திரிகைப்பணி ஆற்றியுள்ளார்

ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதி தங்கள் தமிழியல் கருத்துக்களையும் மற்றும் ஆய்வுகளையும் ஆய்வு முடிவுகளையும் உலகிற்கு உணர்த்த தமிழ்நாட்டு அறிஞர்கள் பலரைத் தமிழ் கல்சர் இதழிலும் பின்னர் ஜேணல் ஒவ் தமிழ் ஸ்ரடீஸ் இதழிலும் எழுதவைத்த பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும் என டாக்டர் பா.இறையரசன் தெரிவிக்கிறார்.

இந்த இதழ்களில் எழுதிய சில அறி



ஞர்களின் பெயர்களை மட்டும் இங்கு நோக்குவோம். தமிழ்நாட்டு அறிஞர்களில் அண்ணாமலைப்பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.இரத்தினசாமி - சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை - சென்னை பல்கலைக்கழக தமிழ்த்துறைப்பேராசிரியர் இரா. சேதுபிள்ளை - அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் அ.சிதம்பர

இயக்குனர் அ.சுப்பையா - சென்னை பல்கலைக்கழக டாக்டர் கே.கே. பிள்ளை - பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைத் தலைமைப்





பேராசிரியர் டாக்டர் மு.வரதராசன் போன்றோர் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கை மற்றும் மலேசியா அறிஞர்களில் சுவாமி ஞானப்பிரகாசர் - சுவாமி விபுலானந்தர் - பண்டிதர் கே.பி. இரத்தினம் - வித்துவான் எவ்.சி.எக்ஸ். நடராசா - கே.எஸ். அருள்நந்தி - எச்.எஸ். டேவிட் அடிகளார் - சிலாப ஆயர் எட்மன் பீரீஸ் - ஏ.ஜெயரத்தினம் வில்சன் - டாக்டர் கே. கைலாசபதி - போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

### அச்சேறாத நூல்கள், ஆய்வேடுகளிலிருந்து கட்டுரைகளை வெளியிட்ட பத்திரிகைப்பணி

தனிநாயகம் அடிகளாரின் நான்காவது பத்திரிகைப்பணி மறைந்த அறிஞர்கள் மற்றும் தம் காலத்து அறிஞர்களின் மிகச்சிறந்த நூல்கள் மற்றும் அச்சேறாத நூல்கள் ஆய்வேடுகளிலிருந்து கட்டுரைகளை எடுத்து தம் இதழ்களில் வெளியிட்ட பத்திரிகைப் பணியாகும்

கருத்தரங்கக் கட்டுரைகளாக வெளியிடப்பட்டமைக்கு உதாரணமாக இதனைத் தரலாம். அரச அறிவியற்கழகம் (இலங்கைக்கிளை) பொதுக்குழு 1946 - சுவாமி ஞானப்பிரகாசர் - திராவிடர்கள் இந்தோ ஐரோப்பியர்கள் மூலத்தோற்றத்துக்கான மொழியியல் சான்றுகள் - கட்டுரை படித்தவர் சிலாப ஆயர் எட்மன் பீரீஸ். நூல்களில் இருந்து கட்டுரைகள் வெளியிடப்பட்டமைக்கு உதாரணமாக இதனைத் தரலாம்.




யாழ்ப்பாணத்து அரசர்களும் இலங்கைத்தமிழர்களின் தொல்பழங்காலத்திலிருந்து தொடங்கும் வரலாறும் (அச்சேறாத நூல்) சுவாமி ஞானப்பிரகாசர் - திராவிடர்களின் மூல இருப்பிடம் இலங்கை.

### தனிநாயகம் அடிகளாரின் பெயரில் இன்று ஆற்றவேண்டிய பணிகள்

இவர் சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் என்ற தம் பெயரைத் தனித்தமிழ் பெயராக மாற்ற விரும்பி தமது தந்தைவழி முன் என்ற பெயரையும் இணைத்து தனிநாயகம் என மாற்றித் தூயதமிழ்ப்பெயரிலேயே தாம் அழைக்கப்படவேண்டும் என விரும்பினார்.

தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் பிரான்ஸ்சிஸ் திபூசியஸ் றோச் ஆண்டகையுடன் கலந்தாலோசித்தே இத்தமிழ்ப் பெயரை எடுத்துக்கொண்டார் என நிர்மலா இராசரத்தினம் தெரிவிக்க இந்தி



யாவை சேர்ந்த அமுதன் அடிகளார் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரை இவர் ரோம் நகரில் கல்வி பயின்ற 1935 - 1939 ஆண்டு காலப் பகுதியிலேயே மாற்றிக் கொண்டார் எனத்தெரிவிக்கின்றார்.

### தனித்தமிழ்ப்பெயர் வைக்கும் பழக்கம் இன்று அருகிவிட்டது

இன்று தனித்தமிழில் பெயர் வைப்பது அரிதாகிவிட்டது. யாழ் மறை மாவட்ட



மும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் நடத்தி தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாக்கொண்டாட்டங்களில் திருமறைக் கலாமன்ற அரங்கில் உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தனித் தமிழ்ப் பெயர்களை தம்பிள்ளைகளுக்கு வைக்க தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் நாம் சபதம் எடுக்க வேண்டுமென வேண்டினார். இக்கருத்தை நாமும் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்

இன்று தனித் தமிழ்ப்பெயர் வைக்கும் பழக்கம் அருகிவிட்டது சமயப்பெயர்களை வைப்போர் தொகை குறைந்து விட்டது ஆங்கிலப பெயர்களை வைக்கும் மோகம் அதிகரித்துவிட்டது - வாயில் இலகுவாகக் கூப்பிடக்கூடிய பெயர்களை வைப்போர் இன்று இல்லை என்ற வாதப் பிரதிவாதங்கள் மத்தியில் இன்று புலம் பெயர் நாடுகளிலும் மற்றைய இடங்களிலும் இருப்போர் ஆங்கிலப் பெயர்களே இன்று தேவையாய்யுள்ளன என்று வாதி



புலம்பெயர் நாடுகளில் வாழும் பெரியவர்கள் கூட தம் பெயரை தம்மோடு வாழ்வோரின் தேவைக்கேற்ப மாற்றி வருகின்றனர். காலமாற்றத்திற்கும் சமூகத் தேவைக்குமேற்ப ஆங்கிலப் பெயர்களுடன் கட்டாயம் ஒரு தமிழ்ப்பெயரையும் வைப்போம் என்றாவது ஒரு உறுதி எடுக்க வேண்டும். இது தனிநாயகம் அடிகளின் விருப்பை நிறைவுசெய்ய வழிசெய்யும்.

### இன்று தமிழை விரும்பிக்கற்போர் எண்ணிக்கை குறைந்து விட்டது

தனிநாயகம் அடிகளார் 1939 இல் குருவாகும்போது இறையியல் கலாநிதிப்






பட்டம் பெற்று இருப்பினும் நன்றாத் தமிழ் செய்வதற்கு தமிழை நன்றாகக் கற்றிருக்கவேண்டும் என்ற அவாவுடனும் விருப்புடனும் தமிழ்கற்க முனைந்தார். அதற்கான உத்தரவு கிடைக்காதபோது திருவானந்தபுரம் மறைமாவட்டத்திலிருந்து தூத்துக் குடிமறைமாவட்டத்திற்கு மாறிச் சென்று தமிழ் கற்றுப் புலம. பெற்றார்.

சிதம்பரத்தில் தங்கி இருந்த போது குருசாமி சுபிரமணிய அய்யரிடம் 4 ஆண்டுகள் தமிழ் கற்றுள்ளார். 1945 - 47 ஆண்டுகாலப்பகுதியில் தமிழில் கலைமுதுவர் பட்டம் பெற்றுள்ளார். 1955 - 57 ஆண்டுகாலப்பகுதியில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்விகற்றபோது அவர் சமயக் குரவராகவும் வயதில் மூத்தவராகவும் இருந்தமையால் மாணவர்கள் இவருடன் நெருங்கிப் பழகவில்லை என அறியவருகிறது. தமது சமயத்தையோ வயது அதிகம் என்ற எண்ணத்தையோ பொருட்படுத்தாது தமிழ் கற்கும் ஆர்வத்தை அவர் விடவில்லை. தமிழை முழுமையயாகக் கற்பதன் வழியேயே தமிழ்ப்பணி ஆற்ற முடியும் என நம்பி படித்து முழு வெற்றி கண்டார்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா - சீனா உறவுகள் சர்வதேசத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன

## புதுடில்லிக்கான சீனத் தூதுவர் விவரிப்பு

சீனா - இந்தியா உறவுகள் இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, பிராந்தியத்திலும் உலகிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங் கூறினார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்த நான்கு திட்டங்களையும் தூதுவர் முன்வைத்தார்.

பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துதல், வெற்றி - வெற்றி ஒத்துழைப்பு, வேறுபாடுகளை சரியான முறையில் கையாளுதல் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் ஆகியவை கோடிட்டுக் காட்டப்பட்ட முன்மொழிவுகளாகும்.

சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டதன் 73 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மெய்நிகர் நிகழ்வில் செவ்வாய்க்கிழமை யன்று தூதர் பேசினார்.

'ஆசிய நூற்றாண்டு' என்பதை சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் கூட்டு வளர்ச்சி மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பின் மூலமும், சீனா, இந்தியா மற்றும் பிற ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலமும் மட்டுமே நிறைவேற்ற முடியும் என்றார் அவர்.

இரு நாடுகளின் எல்லையில் கிழக்கு லடாக் மோதலைத் தொடர்ந்து, உறவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டில் அமைதி முக்கியமானது என்றும், எல்லையின் நிலை உறவின் நிலையைத் தீர்மானிக்கும் என்றும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

கடந்த மாதம், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், எல்லையில் பெய்ஜிங் நடந்து கொண்ட விதத்துக்குப் பிறகு, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு 'மிகவும் கடினமான கட்டத்தை' கடந்து வருவதாகவும், இரு அண்டை நாடுகளால் கைகோர்த்து இணைந்து செயற்பட முடியாவிட்டால் ஆசிய நூற்றாண்டு சாதியமாகாது என்றும் வலியுறுத்தியிருந்தார்.

அடுத்த ஆண்டு, இந்தியா ஷங்காய் ஒத்துழைப்பு கட்டமைப்பு மற்றும் ஜி20




நாடுகள அமைப்பு ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்கும், மேலும் சீனா மற்ற உறுப்பு நாடுகளுடன் இணைந்து அதன் தொடர்புடைய பணிகளில் இந்தியாவை ஆதரிக்கும் என்று சீனத் தூதர் கூறினார்.

(மூலம்:என்.டி.ரி.வி.)

## அலைபேசிகள் தயாரிப்பில் இந்தியா உலக அளவில் 2 ஆவது இடத்தில்!





"உலக அளவில் அலைபேசி தயாரிப்பில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது" என மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பதுறை இணையமைச்சர் ராஜிவ் சந்திரசேகர் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் அவர் நேற்று அளித்த பேட்டியின் சாரம்சம் வருமாறு:-

பிரதமரின் உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்தில் எலக்ட்ரோனிக் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை துவங்கி வைக்க உள்ளேன். இதன் வாயிலாக 6,500 கோடி ரூபாய் முதலீடுமற்றும் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழகம், கர்நாடகா, உத்தரப் பிரதேசம், ஆந்திரா போன்ற மாநிலங்கள் எலக்ட்ரோனிக் உற்பத்தி துறையில் வேகமாக வளர்ந்து வருகின்றன. பிரதமர் மோடி பதவி ஏற்றபோது 87 சதவீதம் அலைபேசிகள் இறக்குமதி செய்யப்பட்டன.

தற்போது 97 சதவீத அலைபேசிகள் இந்தியாவிலேயே தயாரித்து பயன்படுத்தப்படுகின்றன. அலைபேசிகள் தயாரிப்பில் உலக அளவில் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. இது பிரதமர் மோடியின் வளர்ச்சி மொடலின் தாக்கம். அடுத்த 10 ஆண்டுகளில் மின்னணு தொழில் துறையில் மட்டும் 4 லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாகும்; 30 ஆயிரம் கோடி ரூபாய் வரை முதலீடு கிடைக்கும்.

பிரதமரின் முயற்சியால் இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் 2020 இல் 50 ஆயிரம் கோடி அலைபேசிகள் தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன. பிரதமரின் தலைமையில் இந்தியா வேகமாக வளர்ந்து வருவதால் முதலீடு செய்ய பல்வேறு நிறுவனங்கள் இந்தியாவை தேர்வுசெய்கின்றன. - இவ்வாறு அவர் கூறினார்.

## 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் முதல் நாளிலேயே ரூ.75 கோடி வசூல்




'பொன்னியின் செல்வன்' திரைப்படம் முதல் நாளில் மட்டும் (இந்தியப் பணத்தில்) ரூ.75 கோடிக்கு மேல் வசூலித்து உள்ளதாக கூறப்படுகிறது.

பொன்னியின் செல்வன், கல்கி கிருஷ்ணமூர்த்தியின் அதே பெயரில் நாவலை அடிப்படையாகக் கொண்டது. இது முதன்முதலில் 1955 இல் பிரசுரமானது.

இப்போதுவ்மணிரத்னம் இயக்கி உள்ள இந்த படத்தில் விக்ரம், ஐஸ்வர்யா ராய் பச்சன், ஜெயம் ரவி, கார்த்தி, திரிஷா, ஐஸ்வர்யா லட்சுமி, சோபிதா துலிபாலா, பிரபு, ஆர் சரத்குமார் , விக்ரம் பிரபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். இரண்டு பாகங்களாக உருவாகியுள்ள 'பொன்னியின் செல்வன்' முதல் பாகம் நேற்று முன்தினம் உலகம் முழுவதும் வெளியாகி உள்ளது.

மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ள இப்படம் நேற்று முன்தினம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் ஆகிய 5 மொழிகளில் பிரம்மாண்டமாக ரிலீஸ் ஆனது. மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் ரிலீசான இப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது. டிக்கெட் முன்பதிவு தொடங்கிய சில மணி நேரத்திலேயே 2 வாரங்களுக்கான டிக்கெட்கள் முன்பதிவு செய்யப்பட்டு சாதனை படைத்தது. இதனால் படத்தின் மீதான ரசிகர்களின் எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது.

இப்படம் முதல் நாளில் வசூலை வாரிக் குவித்து உள்ளது. உலகம் முழுவதும் 5,000க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் வெளியான பொன்னியின் செல்வன், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில், முதல் நாளில் அதிக வசூல் செய்த படங்களின் பட்டியலில் மூன்றாம் இடம் பிடித்துள்ளது. அதன்படி இப்படம் முதல் நாளில் மட்டும் ரூ.75 கோடிக்கு மேல் வசூலித்து உள்ளதாக கூறப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் இப்படம் ரூ.25 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாகவும், அதேபோல் இப்படத்தின் இந்தி பதிப்பு ரூ.15 கோடிக்கு மேல் வசூலித்து உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய அளவில் ரூ.42 கோடி வசூல் என தகவல் வெளியாகி உள்ளது. இதன்மூலம் முதல் நாளில் அதிக வசூல் ஈட்டிய தமிழ் படம் என்கிற சாதனையையும் பொன்னியின் செல்வன் படைத்துள்ளது.

# இப்போது உயர்தொழில்நுட்பம் இங்கு ஜனநாயமயமாகிவிட்டது



## 5ஜி சேவையை ஆரம்பித்து மோடி பெருமிதம்

புதுடெல்லி, இந்திய மொபைல் காங்கிரஸின் 4 நாள் மாநாடு, புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

'இந்தியா மொபைல் காங்கிரஸ் - 2022' மாநாட்டின் தொடக்க விழாவில், நேற்று பிரதமர் நரேந்திர மோடி 5ஜி இணையத்தை முறைப்படி காலை 10 மணிக்கு தொடங்கி வைத்தார்.

நாட்டின் மூன்று பெரிய தொலைத் தொடர்பு நிறுவனங்கள், இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் முன் 5ஜி இணையத்தின் மாதிரியை காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

5ஜி அடிப்படையிலான டிரோன்கள், கழிவுநீர் கண்காணிப்பு அமைப்புகள், சுகாதாரம் தொடர்பான தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பிற்கான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தளங்கள் மூலம் விவசாயத்தின் தொழில்நுட்பத்தையும் அவர் மேற்பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து பிரதமர் மோடி பேசியதாவது:-

5ஜி அறிமுகமானது 130 கோடி இந்தியர்களுக்கு தொலைத்தொடர்பு துறையின் பரிசு. இது நாட்டில் புதிய சகாப்தத்தை நோக்கிய ஒரு படியாகும், உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியை முன்னெடுப்போம். டிஜிற்றல் இந்தியாவின் வெற்றியானது சாதனத்தின் விலை, டிஜிற்றல் இணைப்பு, தரவு செலவுகள் மற்றும் டிஜிற்றல் முதல் அணுகுமுறை உள்ளிட்ட 4 தூண்களை அடிப்படையாகக் கொண்டது. அவை அனைத்திலும் நாங்கள் வேலை செய்தோம். நாட்டின் ஏழைகள் கூட எப்போதும் புதிய தொழில்நுட்பங்களை பின்பற்ற முன்வருவதை நான் பார்த்திருக்கிறேன். தொழில்நுட்பம் அதன் உண்மையான அர்த்தத்தில் ஜனநாயகமாகிவிட்டது. முன்னதாக, 1ஜிபி டேட்டாவின் விலை சுமார் ரூ.300 ஆக இருந்தது, தற்போது ஒரு ஜிபிக்கு ரூ.10 ஆக குறைந்துள்ளது. சராசரியாக, இந்தியாவில் ஒரு நபர் மாதத்திற்கு 14 ஜிபி பயன்படுத்துகிறார். இதற்கு மாதம் ரூ.4,200 செலவாகும் ஆனால் ரூ.125 - 150 செலவாகின்றது. அரசின் முயற்சியே இதற்கு வழிவகுத்தது. டிஜிற்றல் இந்தியா ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு இடத்தை அளித்துள்ளது. சிறிய தெரு வியாபாரிகள் கூட யு.பி.ஐ. வசதியைப் பயன்படுத்துகின்றனர். என தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## கட்டு மரங்களில் இருந்து பெரும் சர்வதேச கடற்பயணம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 138

விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலங்களில் மண்டூர் மகேந்திரன், கந்தசாமி, கே.ஸி.நித்தியானந்தா, டாக்டர் ராஜசுந்தரம், வண. பிதா ஜேம்ஸ், காந்தியத்தின் தன்னார்வப் பணியாளர்கள் மாதத்திற்கு ஒரு முறையாவது நெடுங்கேணி, ஒதியமலை, ஒட்டுசுட்டான் மற்றும் வவுனியா – மதவாச்சி – மன்னார் வீதிகளை ஒட்டிய மீள்குடியேற்றத் திட்டங்களை பார்வையிடுவதற்காக பயணம் செய்வது வழக்கம். அங்கு பிரபாகரன், உமா மகேஸ்வரன், ஊர்மிளா, பேபி, சந்ததியார், உதயன், தயாபரசிங்கம் போன்ற பல தன்னார்வலர்களை அந்தப் பயணங்களில் சந்தித்து நாங்கள் கருத்தாக்கங்கள் செய்வதும் வழமை. அவை அனேகமான நாள்களில் விளக்குகளினதும்,



ரிச்சர்ட் ஆர்மிடேஜ்

நிலாவினதும் வெளிச்சங்களில்தான் நடக்கும். தரையில் படுத்தபடி, 'பஸ்டி' என்கிற நாய் அடிக்கடி எல்லோரது கால்களையும் நன்னி நன்னித் தன் பல்லுக்குப் பதம் பார்க்க, நட்சத்திரங்களை பார்த்து தமிழீழக் கனவுகளில் மிதந்தவாறே பேச்சுக்கள் இருக்கும்.

அந்த நாய்க்கு 'பஸ்டி' என்ற பெயர் வந்தது சுவையானது. பண்ணையில் பேபி அப்பொழுது தன்னார்வத் தொண்டராக இருந்தார். அங்கே அவர் ஒரு முறை பதவியா பகுதிக்குச் சென்று காணிகள் அபகரிப்பைப் பார்த்து வரும் போது, அங்கிருந்து ஒரு தப்பல் குட்டியாக அவரோடு வந்து ஒட்டிக்கொண்டது இந்த நாய்க்குட்டி. அதற்கு பெயர் எதுவும் இருக்கவில்லை. எத்தனையோ சிங்களப் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டும் அது தலையசைக்கவில்லை.

சில மாதங்களின் பின் சந்தேகத்தின் பேரில் பேபி (இயற்பெயர் பரராஜசேகரம்), உதயகுமார், ராஜு என்ற மூவரை பொலிஸார் 14 ஆகஸ்ட் 1979 அன்று டொலர் பண்ணையில் இருந்த போது கைது செய்தனர். அவரைக் கைது செய்த புலன் விசாரணையாளர் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை பின்னர் பேபியை கெண்ட் பண்ணைக்கு தேடுதல்களுக்காகக் கொண்டுவந்த போது, இந்த நாய்க்குட்டி அவர்கள் பின்னாலேயே போய்க் கத்திக் கடித்துக் குளற, பஸ்தியாம்பிள்ளை ஆத்திரத்தில் அதை எட்டி உதைக்க, அது உதையையும் வாங்கிக் கொண்டு பஸ்தியாம்பிள்ளைக்கு மேலும் கடித்ததாம். பஸ்தியைக் கடித்த 'வீரவான்' என்று அதன் பின் அதனை 'பஸ்டி' என்று எல்லோரும் கூப்பிட்டார்கள். இவை பசுமையான ஆரம்ப கால நாள்கள்.

அப்பொழுது லட்சியம் நிறைந்திருந்த இந்த இளைஞர்களுக்கு தமிழீழம் காண்பது என்பது சுலபமல்ல, இங்கு கஷ்டம் ஏதும் வந்தால் கட்டுமரத்திலோ வள்ளத்திலோ ஏறி அக்கரைக்கு ஓடி விடுவதல்ல, அல்லது கட்டுமரத்திலிருந்து மீன் பிடிப்பதும் அல்ல, பெரும் கப்பலை நடுக் கடலின் ஊடாகப் பல எதிர்பாராத சுழிகள், நீரோட்டங்களை கடந்து லாவகமாகவும், சாமர்த்தியமாகவும் செலுத்திக் கரையை அடைய வேண்டும், அதற்கு லட்சியமும் தைரியமும் மட்டும் போதாது, அதற்கான சாமர்த்தியமான அணுகுமுறைகளும் தேவை என எல்லோரும் பேசுவது வழமை.

இந்தப் பேச்சுக்களில் டாக்டர் ராஜசுந்தரம் தானும் தனது மனைவியும் ஐரோப்பாவில் இருந்து காரில் பல நாடுகளூடாக தரை மார்க்கமாக இலங்கை நோக்கி வந்த போது எதிர்கொண்ட பல சம்பவங்களைக் கூறி, அவற்றைச் சமாளித்த விதங்களையும் விவரிப்பார். இவை யாவும் தொடக்க கால அத்தியாயம்.

விடுதலைப் புலிகள் இந்தியா, ஸ்ரீலங்கா, பிரேமதாசா, சந்திரிகா என நாட்டின் மட்டத்திலும் ஓரளவு பிராந்தியத்திலும் பேச்சு வார்த்தைகள் நடத்தி அனுபவம் கண்டவர்கள். இப்பொழுதுதான் முதன்முறையாக சர்வதேச பரப்பில், சர்வதேச நாடுகள் தங்கள் நலன்களுக்காக, புவியியல் வளங்களுக்காக, காய்களை நகர்த்தி விளையாடும் அரங்கில் ஒரு தீர்வு காண பேச்சுவார்த்தைகளுக்கு முன்னேறி இருந்தார்கள். சர்வதேசத்தின் வழிமுறைகள், ஏற்பாடுகள், எதிர்பார்ப்புகள் என விடுதலைப் புலிகளை இங்கு அழைத்து வந்து ஸ்ரீலங்கா தனது இறைமையில், அதனது வளத்தில், சர்வதேச நாடுகளிடம் விடுதலைப் புலிகள் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைந்து, கட்டுப்பட்டு வர வேண்டும், சர்வதேச உலகம் எதிர்பார்க்கும் குணாதிசயங்களுக்கு மாற்றம் அடைய வேண்டும் என அழுத்தங்கள் தருமாறு வேண்டிக் கொண்டது.

நான் முன் கூறிய, கருடன் பாம்பை நிலத்தில் வைத்து கொத்திக் கொல்ல முயல்வதில்லை, அலாக்காக வானத்துக்குத் தூக்கிச் சென்று, காற்று வெளியில்



ஜான் பீட்டஸன்

அதனைப் பதம் பார்க்கும் என்ற அந்த இக்கட்டில்தான் விடுதலை புலிகள் இருந்தனர். இங்கு கருடன் வெளிவந்தது.

### சர்வதேச நிதி உதவிகளில் கருடன்

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க இரு பகுதியினரும் ஒற்றுமையாகவே அப்படியான மீள் கட்டமைப்பு நிதிகளுக்கு சர்வதேசத்தை அணுக வேண்டும் என சமாதானப் பேச்சின் தொடக்கத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. தமிழ்ப் பகுதிகளின் மீள்குடியேற்றங்களுக்கும் கட்டுமானப் பணிகளுக்கும் நிதி தர முடியாமல் போனமைக்கு இந்த நிதிப் பற்றாக்குறை காரணமாகி, பேச்சு வார்த்தையை முன்னெடுக்கவும், அதன் முடிவில் நாட்டைக் கட்டி எழுப்பவும், தேவையான நிதியைத் திரட்டுவதற்காக முதலில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் 25 நவம்பர் 2002இல் நோர்வே அரசாங்கம் சர்வதேச நாடுகளின் சந்திப்பை நடத்தியது. அதற்கு 37 நாடுகளில் இருந்து நூற்றுக்கும் மேற்



பேபி சுப்பிரமணியம்

பட்ட அரசுகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். பேச்சுவார்த்தைகள் சுமுகமாக போவதால் அது நன்மையாக முடியும் என்று தாங்கள் கருதுகின்றனர் என நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டர்சன் தெரிவித்து, சர்வதேச நாடுகள் யுத்தத்தால் படுமோசமாக பாதிப்படைந்துள்ள தமிழ்ப் பகுதிகளை மீளக் கட்டியெழுப்ப உதவிகள் தர வேண்டும் என விநயமாகக் கேட்டுக் கொண்டார். அப்படி அந்த உதவிகள் கிடைத்து மீள் கட்டமைப்புகள் நடைபெறாவிட்டால், அடையும் சமாதானம் கூட அர்த்தமற்றதாகிவிடும் என அவரின் சமர்ப்பணம் இருந்தது. இதனையே ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் எதிரொலித்தார். போரினால் நாடு பலமாகப் பாதிக்கப்பட்டு, பலவீனப்பட்டுள்ளது. சர்வதேசங்களின் உதவி கிட்டாவிடில் சமாதானத்தின் பயனை பெற்றுக் கொள்ள முடியாது என்பது அவர் கருத்து.

அதைத் தொடர்ந்து பேசிய அமெரிக்காவின் வெளிவிவகார உதவிச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தனது நாடு உருவாகும் சமாதானத்தையும், நாடுகள் முறையாக வளர்வதையும் எப்போதும் ஆதரிக்கும் எனவும், விடுதலைப் புலிகள் வன்முறையையும் பிரிவினையையும் கைவிட்டு முன்னேற வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார். அவர் மேலும் விடுதலை புலிகள் அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிப் போக எடுத்துள்ள அர்ப்பணிப்பையும், அதற்காகவன்முறையற்ற வழிகளை தேர்ந்தெடுத்ததிலும் அமெரிக்கா சந்தோசம் கொள்கிறது, ஆனாலும் அமெரிக்கா அவர்களை மேலும் ஒரு படி மேலே சென்று, வெளிப்படையாகவே வன்முறைகளைஜ் கைவிடுவதாகவும், பயங்கரவாதத்தை அனுசரிப்பதில்லை எனவும், ஆயுதப் போராட்டத்தையும் தனி நாட்டுக் கோரிக்கையும் கைவிட்டு விட்டார்கள் எனவும், நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் தெளிவாக விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும் என்றார். இந்தத் தேவையற்ற சமர்ப்பணம் வன்முறையை விடுதலைப்புலிகள் மீது சுமத்தி, அரச பயங்கரவாதத்தை தவிர்த்தது.

விடுதலை புலிகளை முக்கியமாக – மதியுரைஞரை – இந்த உரை தூக்கி வாரிப் போட்டது. சோசலிசவாதியான அவர் அமெரிக்காவை நன்கு அறிந்தவர். தன்னுடைய சந்தர்ப்பம் வந்தபோது தமிழ்ப் பகுதிகளில் இருக்கும் நிலைகளையும், தமிழ் மக்கள் ஆயுதங்களைத் தூக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

அந்த நிகழ்ச்சியில் ஜப்பான் பிரதிநிதியாகப் பங்கு பற்றிய யசூசி அகாஷி, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி எனப் பலர் கருத்துரைத்தனர். பங்கு பற்றிய நாடுகள் உடனடியாகவே 70 கோடி டொலர்களை நிதி உதவியாகத் தருவதற்கு பொருந்திக் கொண்டன.

(21ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஐப்பசி 6!

## மூன்று நாள்களில் எட்டு அமர்வுகள்
## 2 ஆயிரத்து 377 பேருக்குப் பட்டங்கள்
## 184 பேருக்குப் பட்டப்பின் தகைமை
## 2 ஆயிரத்து 40 பேருக்கு உள்வாரி பட்டங்கள்
## 153 பேருக்கு தொலைக்கல்விப் பட்டங்கள்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் ஐப்பசி மாதம் 06 ஆம், 07 ஆம், 08 ஆந் திகதிகளில், பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதல் இரண்டு நாள்களும் தலா மூன்று அமர்வுகளும், மூன்றாம் நாள் இரண்டு அமர்வுகளுமாக எட்டு அமர்வுகளில் பட்டங்களும், தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. 184 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 40 உள்வாரி மாணவர்களுக்கும், 153 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் இதன் போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தர், தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கவுள்ளார்.

உயர் பட்டப் படிப்புகள் பீடம், கலைப்பீடம், வணிக முகாமைத்துவ பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், மருத்துவ பீடம், பொறியியல் பீடம், தொழில் நுட்ப பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியா பல்கலைக் கழகத்தை)ச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட தொலைக்கல்விப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் இந்தப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 184 பேர் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை இரண்டு (2) பேரும், முதுதத்துவமாணிப் பட்டத்தைப் பத்து (10) பேரும், சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணிப் பட்டத்தை ஆறு (6) பேரும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை ஏழு (7) பேரும், கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா தகைமையை 157 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா தகைமையை இரண்டு (2) பேரும் பெறவுள்ளனர்.

பட்டமளிப்பு விழாவின் முதலாம் நாள் – ஐப்பசி 06 ஆம் திகதி, முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது அமர்வில், உள்வாரியாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 142 பேர் மருத்துவமாணி, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தையும், ஒருவர் மருத்துவ விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஏழு பேர் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 104 பேர் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 33 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது அமர்வில், வணிக முகாமைத்துவ பீடத்தில் இருந்து வணிகமாணி (சிறப்பு) பட்டத்தை 89 பேரும், வணிகமாணிப் பட்டத்தை ஒருவரும் (1), வணிகமாணி (பொது)ப் பட்டத்தை ஒருவரும் (1) பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர். இவர்களுடன், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 143 பேர் விஞ்ஞானமாணி (பொது)ப் பட்டத்தையும், 38 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 20 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், ஒருவர் கணினி விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மூன்றாவது அமர்வில், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த 265 பேர் வியாபார நிர்வாக மாணி (சிறப்பு) பட்டத்தையும், ஏழு (7) பேர் வியாபார நிர்வாக மாணி (பொது)ப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். இவர்களுடன், தொழில் நுட்ப பீடத்தைச் சேர்ந்த 21 பேர் உயிர் முறைமைத் தொழில் நுட்பமாணி (சிறப்புப்) பட்டத்தையும், ஒன்பது (9) பேர் பொறியியல் தொழில்நுட்பமாணி (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் – ஐப்பசி 07 ஆம் திகதி, முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது அமர்வில், வவுனியா பல்கலைக் கழக (முன்னைய யாழ். பல்கலைக்கழ வவுனியா வளாகத்) தின் வியாபார கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 38 பேர் திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், 18 பேர் வியாபார முகாமைத்துவமாணி (பொது) பட்டத்தையும், 17 பேர் வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தையும், 48 பேர் வியாபார முகாமைத்துவமாணி கணக்கீடும் நிதியும் (சிறப்பு) பட்டத்தையும், பத்துப் (10) பேர் மனித வள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தையும், மூன்று (3) பேர் வியாபாரப் பொருளியலில் வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவிருக்கின்றனர். இவர்களுடன், கலைப்பீடத்தைச் சேர்ந்த 99 பேர் கலைமாணிப் பட்டத்தையும், 79 பேர் கலைமாணி (பொது)ப் பட்டத்தையும், 28 பேர் மொழிபெயர்ப்புக் கற்கையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது அமர்வில், வவுனியா பல்கலைக் கழகத் (முன்னைய யாழ். பல்கலைக்கழ வவுனியா வளாகத்) தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 24 பேர் தகவல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி பட்டத்தையும், 28 பேர் விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பீடும் ) பட்டத்தையும், 24 பேர் சுற்றுச் சூழலியல் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 13 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், ஏழு (7) பேர் சுற்றுச் சூழலியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், 21 பேர் தகவல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த நான்கு (4) பேர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணிப் பட்டத்தையும் பெறவிருக்கின்றனர். இவர்களுடன் யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடத்தைச் சேர்ந்த 223 பேர் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மூன்றாவது அமர்வில், கலைப் பீடத்தைச் சேர்ந்த 143 பேர் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், 162 பேர் கலைமாணி (பொது) பட்டத்தையும், ஐந்து (5) பேர் கலைமாணி சிறப்புப் பட்டத்தையும், எட்டு (8) பேர் நுண்கலைமாணிப் (சங்கீதம், நடனம் – பரதம், சித்திரமும், வடிவமைப்பும்) பட்டத்தையும் பெறவிருக்கின்றனர்.

மூன்றாம் நாள் – ஐப்பசி 08 ஆம் திகதி, முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது அமர்வில், கலைப்பீடத்தைச் சேர்ந்த 46 பேர் சட்டமாணிப் பட்டத்தையும், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தைச் சேர்ந்த ஆறு (6) பேர் தாதியியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், ஏழு (7) பேர் மருந்தகவியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும், இரண்டு (2) பேர் மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இவர்களுடன், விவசாய பீடத்தைச் சேர்ந்த 95 பேர் விவசாயத்தில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது அமர்வில், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஆறு (6) பேர் விஞ்ஞானத்தில் உயர் டிப்ளோமா தகைமைச் சான்றிதழையும், ஒருவர் (1) கணினி விஞ்ஞானத்தில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று வெளியேறிய 49 பேர் வணிகமாணி சிறப்புப் பட்டத்தையும், 13 பேர் வணிகமாணிப் பட்டத்தையும், 83 பேர் வியாபார முகாமைத்துவமாணி பட்டத்தையும், ஒருவர் (1) வியாபார முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமா தகைமைச் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# பொற்பதம் பணிந்தோமம்மா நற்றுணை என்றும்நீயே !

மாதரது குரலிலும் மழலையரின் மொழியிலும்
கீதமென ஒலித்திடும் குயிலனது குரலிலும்
பேதமற அமர்ந்துமே பெருங்கருணை பொழிகிறாய்
வீணையினை மீட்டிடும் வெண்டாமரை வாணியே

நூல்பல கற்கவேண்டும் நுண்பொருள் உணரவேண்டும்
வாய்மையாய் வாழவேண்டும் மனவழுக் ககலவேண்டும்
தாழ்மையாய் இருக்குமெண்ணம் தான்மன மமரவேண்டும்
வாணியே வேண்டுகின்றோம் வழங்கியே நிற்பாயம்மா

கற்றவர் அணைக்கவேண்டும் மற்றவர் மதிக்க வேண்டும்
நற்றமிழ் நாவிலென்றும் நடமிட்டு நிற்கவேண்டும்
சொற்றமிழ் சிறக்கவேண்டும் சுவையுடன் பாடவேண்டும்
பொற்பதம் பணிந்தோமம்மா நற்றுணை என்றும்நீயே

ஞானியர் போற்றுமம்மா நான்மறை உணர்த்துமம்மா
தேனினும் இனிமைமிக்காய் தெளிவினை ஊட்டுகின்றாய்
வானவர் வியக்குமாறு மதியினைத் தந்துநின்று
வையத்தார் விரும்புவண்ணம் வைத்திட்டாய் வாணித்தாயே

ஏழைகள் கற்கவேண்டும் இருப்பவர் ஈய்தல்வேண்டும்
வாழ்விலே கல்விச்செல்வம் வானோங்கி நிற்கவேண்டும்
தோழமை உணர்வுகொண்டு கற்றவர் இணையவேண்டும்
நாளெலாம் பரவுகின்றோம் நல்லருள் புரிவாயம்மா



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா

## தமிழ் கூறும் நல்லுலகு ...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தமிழை விரும்பிக்கற்போர் தொகை குறைந்து விட்டது. தமிழ் படித்துப் பெரும் பதவிகளுக்குப் போகமுடியாது. பல்கலைக்கழகத்தில் தமிழ்கற்பிக்க பெரும் போரட்டம் நடத்தினாலும் முடியாது. இந்நிலையில் தமிழ்க் கல்வியை மேற்கொள்வோர் தொகை குறைந்துவிட்டது.

**பாடசாலைகள் தோறும் தமிழ்ச்சங்கங்களை நிறுவுவதன் மூலம் தமிழைக் கற்பிக்கமுடியும்**

யாழ்மறைமாவட்டமும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் நடத்திய தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாக்கொண்டாட்டங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் விசாகரூபன் பாடசாலைகள் தோறும் தமிழ்ச. சங்கங்களை நிறுவுவதன்மூலம் தமிழ்மொழியைக் கற்பிக்கமுடியும் எனத் தெரிவித்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று தனிநாயகம் அடிகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் நிறுவப்பட வேண்டும்

பல்கலைக்கழகங்கள் எதுவும் தென்ஆசியாவிலேயே தோன்றாத காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தவேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் முன்வைத்த கென்றிக் கென்றிக்குலஸ் அடிகளை தமிழுலகத்திற்கு முதன்முதல் அறிமுகப்படுத்தியவர் தனிநாயகம் அடிகளாவர். கென்றிக் கென்றிக்குலஸ் அடிகளார் இலங்கையில் மன்னாரிலோ தமிழகத்தில் புன்னைக் காயலிலோ தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டு மெனத்திட்டமிட்டிருந்தார் எனத் தனிநாயகம் அடிகள் எழுதியுள்ளார்.

இலங்கையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்ற இயக்கம் தனிநாயகம் அடிகளார் போன்றோர் முயற்சியால் தோன்றியது. இவற்றின் விளைவாக 1981இல் தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றியது என கலாநிதி பா. இறையரசன் தெரிவிக்கிறார்.

தனிநாயகம் அடிகள் ஜேணலிசம் சென்ரர் ஒன்று இந்தியா திருச்சியில் பாரதியார் சாலை 90 களின் இறுதிப்பகுதியில் இருந்து இயங்கி வருவது பலரும் அறியாத ஒரு தகவலாகும். இலங்கையில் தனிநாயகம் அடிகளாரின் பெயரில் ஒரு நிறுவனமும் இதுவரை இயங்காத நிலையில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று தனிநாயகம் அடிகள் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் நிறுவப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்க விரும்புகிறோம்.

தமிழ்த்தூது தனிநாயாகம் அடிகளின் நூற்றாண்டு விழா 2013ஆம் ஆண்டு தமிழர் வாழும் உலகெங்கும் கொண்டாடப்பட்ட வேளையில் அனைத்துத் தமிழரும் இணைந்து ஆற்றவேண்டிய அரியபணி இதுவாகும்.

இப்பணியை பொதுவாகவே விட்டுவிட்டால் யாரும் ஆற்றப்போவதில்லை. நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்து இப்பணிக்கு முதற்கல்லை வைக்கலாம். தமிழுக்குப் பணியாற்றியுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு குருக்கள் வரிசையில் தன்னலமற்ற பணியாற்றியுள்ள தனிநாயகம் அடிகளின் பணி தொடர எல்லாத் தமிழரும் இணைந்து ஆரம்பிக்க வேண்டிய அரிய பணி இதுவாகும்.

இப்பணி தேன்மதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவிடச்செய்தல் வேண்டும் என்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் பணியை தொடர வழிசெய்யும் - எதிர்கால கல்விச்சமூகம் பெரும் பயன்பெற - வழிவகுக்கும்.

## உரம் வழங்க ஈரான் விருப்பம்!

இலங்கைக்கு உரம் வழங்க ஈரான் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஈரானிய தூதுவருடனான சந்திப்பை அடுத்து, விவசாய அமைச்சு ஈரானிடம் இருந்து உரத்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.

எவ்வாறாயினும் மத்திய கிழக்கு நாடு மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேச தடைகளால் ஈரானில் இருந்து உரத்தை இறக்குமதி செய்வது ஒரு பிரச்சினையாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை யில், தேவையான விண்ணப்பங்கள் வெளிவிவகார அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தாமரை கோபுரத்துக்கு அருகில் இசை நிகழ்ச்சி 'ஹெல்ஃபயர்' என்ற பெயரை பயன்படுத்த எதிர்ப்பு

கொழும்பு - தாமரை கோபுரத்திற்கு அருகில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்கு 'ஹெல்ஃபயர்' என்ற பெயர் பயன்படுத்தப்படுவதற்கு கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்க எதிர்ப்பு தெரி வித்துள்ளார்.

இந்த இசை நிகழ்ச்சிக்கு கொழும்பு மாநகர சபை அனுமதி வழங்கியுள்ள போதிலும் 'ஹெல்ஃபயர்' என்ற பெயரைக் காட்சிப்படுத்த வேண்டாம் என ஏற்பாட்டாளர்களுக்கு அவர் பணிப்புரை விடுத்திருந்தார்.

எனவே அந்த நிகழ்வின் பெயரை மாற்றுமாறு அவர் ஏற்பாட்டாளர் களை வலியுறுத்தியிருந்தார்.

இந்த பெயருக்கு கடும் எதிர்ப்பு இருப்பதாவும் தமது நகரத்தில் ஒரு நரக நெருப்புகச் சேரியை தாம் பார்க்க விரும்பவில்லை என்று அவர் ஏற்பாட்டாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எனவே, நிகழ்வில் 'ஹெல்ஃபயர்' என்ற பெயர் விளம்பரப்படுத்தப்படக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே அதனை நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டதாக கொழும்புமாநரக முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணம் ......

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேநீர் விருந்தின் போது தனிப்பட்ட ரீதியில் மதியுரைஞருடன் பேசிய ஜப்பானிய பிரதிநிதி யசூசி அகாஷி, ஜப்பான் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வில் அதிக ஆர்வம் காட்ட விரும்புகிறது எனவும், மே 2003 இல் ஜப்பானது தலைநகர் டோக்கியோவில் மேலும் நிதி திரட்டுவதற்கான ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இடையில் எதிர்பாராத - விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடப்படாத - அமெரிக்காவிலான கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, விடுதலைப் புலிகள் அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் இருப்பதால் அக்கூட்டத்துக்கு அழைக்கப்பட மாட்டார்கள் எனத் தெரியப்படுத்தப்பட்டது.

வானத்தில் பாம்பினால் வெறுமனே அசையக்கூடியதாகத் தான் இருந்தது. அவர்கள் தங்களது ஏமாற்றங்களையும் எதிர்ப்புகளையும் சமர்ப்பித்தார்கள். ஆனாலும் பங்குபற்ற அழைப்புத் தரப்படவில்லை. அது யதார்த்தமாக நடந்தது. விடுதலை புலிகளும் திடமானார்கள்.

(வளரும்...)

## பொன்னியின் செல்வன்; ..........

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்கியில் பொன்னியின் செல்வன் வெளிவந்த காலத்தில் கல்கி இதழ் எண்பதினாயிரம் பிரதிகள் விற்பனையாகியிருக்கிறது.

இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவுக்கெல்லாம் கல்கி வந்தது.

எங்கள் குடும்பத்தில் பெத்தாச்சி, அம்மா மற்றும் சில உறவினர்கள் கல்கியின் பொன்னியின் செல்வன் உட்பட சில தொடர்கதைகளைப் படித்தனர். எனது அக்காவின் கணவருக்கு தற்போது எண்பது வயதும் கடந்துவிட்டது.

அவர் பல தடவைகள் மீண்டும் மீண்டும் படித்த கதை பொன்னியின் செல்வன்தான்.

இவ்வாறு கொண்டாடப்பட்ட பொன்னியின் செல்வனை - அது வரலாற்றுப்புனைவு என்ற காரணத்தினாலோ என்னவோ, நவீன படைப்பிலக்கியத்துறையில் தீவிரம் காண்பித்தமையினாலோ, நான் படிக்கவில்லை.

அம்புலிமாமா கதைகளை ஆரம்பத்தில் படித்துவிட்டு, கண்ணன் இதழ்களை வாசித்துவிட்டு, முதலில் மு.வரதராசன், அதன்பின்னர் புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், சுஜாதா, பாலகுமாரன், இந்திரா பார்த்தசாரதி, கி. ராஜநாராயணன், அசோகமித்திரன், பிரபஞ்சன், சுந்தரராமசாமி , அம்பை , ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன் என்று கடந்து வந்துவிட்டதனால், கல்கி, அகிலன், நா. பார்த்தசாரதி, விக்ரமன், சாண்டில்யன் முதலானோரின் வரலாற்றுப்புனைவு தொடர்கதைகளை படிப்பதில் ஆர்வம் காண்பிக்கவில்லை.

அதனால், பொன்னியின் செல்வனை படிக்காத நீங்கள் எல்லாம் என்ன எழுத்தாளர்..? என்று எனது மனைவி சொன்னபோது, சுந்தரராமசாமி தனது ஜே. ஜே. சிலகுறிப்புகள் நாவலில் ஒரு பாத்திரம், உங்கள் சிவகாமி சபதத்தை முடித்துவிட்டாளா..? எனக் கேட்கும் எனச் சொன்னேன்.

ஒரு காலத்தில், சார்ள்ஸ் டிக்கன்ஸை படிக்காமல் ஒருவர் ஆங்கில இலக்கிய எழுத்தாளராக முடியாது எனச்சொல்வார்களாம்.

ஆனால், தற்காலத்தில் அவ்வாறு சொல்ல மாட்டார்கள் என நம்புகின்றேன்.

கல்கியின் கள்வனின் காதலி, தியாகபூமி, பார்த்திபன் கனவு முதலான கதைகள் திரைப்படங்களாகியிருக்கின்றன. அவை கறுப்பு - வெள்ளை திரைப்படங்கள்.

தற்போது பென்னியின் செல்வன் நவீன டிஜிற்றல் உலகில் வண்ணத் திரைப்படமாக உருவாகியிருக்கிறது. அன்று எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் கல்கி இதழைப் பொன்னியின் செல்வனுக்காகவே வாங்கிப் படித்தவர்கள் திரையில் தோன்றும் பொன்னியின் செல்வனை திரையில் பார்த்துவிட்டு என்ன சொல்கிறார்கள்? என்பது பற்றிய நேர்காணலை தொகுத்தால் சுவாரசியமான செய்திகள் கிடைக்கலாம்.

திரையில் பார்த்த பொன்னியின் செல்வன் பிரமாண்டமான தயாரிப்புத்தான். சந்தேகமில்லை. நட்சத்திரப்பட்டாளமே தோன்றியிருக்கிறது.

ஏ.ஆர். ரகுமானின் இசையும் ஜெயமோகனின் வசனமும் திரைப்படத்திற்கு பலம் சேர்த்திருக்கின்றன.

முதல் பாகத்தின் முடிவில் ஒரு முடிச்சை வைத்துள்ளனர். இரண்டாம் பாகம் வெளிவரும்போது அந்த முடிச்சு எவ்வாறு அவிழ்க்கப்படுகிறது என்பது தெரிய வரும்.

பொன்னியின் செல்வனின் ரிஷிமூலத்தை அறிவதற்கு புதிய தலைமுறை ரசிகர்கள் காத்திருப்பார்கள்.

## இனி இது .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

என் மீது பற்றும், பாசமும், அன் பும் கொண்டவர் கமலசபேசன். என் சட்ட குருவாகவும் விளங்கினார். கமலசபேசனின் ஒரே மகளுக்கு எனது பெயரின் முன் பாதியைத்தான் அவர் வைத்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

டோக்கியோ ஹோட்டலில் ஒரே தளத்தில்தான் கமலசபேசனதும் எனதும் அறைகள் இருந்தன. அதனால் அச்சமயத்தில் அடிக்கடி சந்திப்போம். உரையாடுவோம்.

"பிரதமர் உம்மைப் பற்றிப் பேசினார். உமக்கும் பாலசிங்கத்திற்கும் உள்ள நெருக்கம் பற்றி அவரே கூறினார். 'என் ஊரவர், குடும்ப ரீதியாக எனக்கு மிக நெருக்கமானவர்' என்று உங்களைப் பற்றி பிரதமரிடம் கூறினேன். அதுவும் தமக்குத் தெரியும் என்று பிரதமர் குறிப்பிட்டார்" - என்றார் சட்டமா அதிபர் கமலசபேசன்.

அடுத்த நாள் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு. மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான உரை இடம் பெற்றது. இப்போது போல பிரதமரின் உரையின் தமிழாக்கம் எங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆங்கில உரையைத் தமிழாக்கி யாழ்ப்பாணத்தில் உதயனுக்கும், கொழும்பில் சுடர் ஒளிக்கும் அனுப்புவதற்காக அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியராக நான் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தேன் - டோக்கியோ ஹோட்டல் செய்தியாளர்கள் கூடத்தில்.

அப்போது 'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க - என் நண்பர் - இப்போது அமரர் - என்னைத் தேடி அவசரமாக அங்கு வந்தார்.

"பிரதமர் ரணில் தனது அறைக்கு உங்களைக் கையோடு கூட்டி வரட்டாம்" என்றார் லஸந்த. என் வேலைகளை விட்டு விட்டுப் புறப்பட்டு பிரதமரின் உத்தியோக பூர்வ அணி தங்கியிருந்த ஹோட்டல் தளத்துக்கு லஸந்தவுடன் விரைந்தேன். தனது அறையில் சாய்மானக் கதிரை போன்ற ஒன்றில் ஆற அமர இருந்தார் பிரதமர் ரணில். என்னை கண்டதும் "என் பேச்சு இவருக்குப் பிடித்திருக்கும் என்றால் அவர்களுக்கும் (புலிகளுக்கும்) பிடித்திருக்கும். நீர் என்ன நினைக்கிறீர்? என் உரை ஓகேயா?" - என்று தனது உரை குறித்துக் கேட்டார். புலிகளோடு என்னை அணி சேர்த்து அவர் நேரடியாகக் கேட்டது இது முதல் தடவை. பின்னரும் ஒரு தடவை அப்படி பொதுவாக - பகிரங்கமாக - கோடி காட்டியிருக்கிறார் அவர். அதைப் பின்னர் விவரிப்பேன்.

பிரதமர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் நான் சிரித்தேன். "உங்கள் பேச்சை பாலசிங்கத்துக்கு அஞ்சல் செய்து விட்டேன். பிரதிபலிப்பு இன்னும் கிடைக்கவில்லை" என்று நான் கூற இடையில் லஸந்த குறுக்கிட்டார்.

"நாங்கள் அவசரப்படத் தேவையில்லை. நாளைக்கு இவரது ஆசிரியர் தலையங்கத்தை பார்த்தால் புலிகளின் - குறிப்பாக பாலசிங்கத்தின் - கருத்து நிலைப்பாடு அதில் பிரதிபலிக்கும்" - என்றார் லஸந்த.

நான் பதில் கூறாமல் அசடு வழிவது போல சிரித்தேன். எனது பத்திரிகையின் நாளைய செய்திகள், ஆசிரியர் தலையங்கம் போன்றவற்றின் மொழிபெயர்ப்பை நேரத்தோடு தமக்குக் கிடைக்கச் செய்யுமாறு தமது உதவியாளர் ஒருவரிடம் பிரதமர் கூறினார்.

'புலிகளுடனான சமரச முயற்சி குழம்பக் கூடாது. பழைய பேச்சுத் தடத்துக்கு நாங்கள் வரவேண்டும். உரியதைச் செய்யுங்கள்' - என்ற பாணியில் குட்டி லெக்ஸர் கொடுத்தார் பிரதமர் ரணில். அவரது அறையில் ஒரு கப் குளிர்பானம் அருந்தி விட்டு என் வேலையைக் கவனிக்க விரைந்தேன்.

2010 ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் சரத் பொன்சேகாவுக்காக ரணில் களத்தில் இறங்கினார். அதிலும் என் பங்களிப்புக் காத்திரமாக இருந்தது. பல விடயங்கள் இடம் பெற்றன. நான் புதுடில்லி வரை சென்று திரும்பினேன். அவற்றில் பலவற்றுக்கு மனோ கணேசன் சாட்சியம். நாங்கள் துணிச்சலாக பல விடயங்களை ஒப்பேற்றினோம். அவற்றையும் பின்னர் ஒரு தடவை விவரிப்பேன்.

2014 இல் என் புத்தக வெளியீட்டுக்கு ரணில்தான் பிரதம விருந்தினர். அவரும் சம்பந்தனும் சரவணபவன் எம்.பியிடமிருந்து முதல் பிரதியைப் பெறுவார்கள் என ஏற்பாடு.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் உட்பட 20 முதல் 30 எம்.பிக்கள் அந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதால் ஏக பாதுகாப்பு கெடுபிடியும் கூட. ரணிலின் அட்வான்ஸ் பாதுகாப்பு அணி விழா மண்டபத்துக்கு நேரத்துடன் வந்து விட்டது.

புத்தக வெளியீட்டு நிகழ்வுக்கு புறப்பட்ட ரணில், இடைவழியில் முடிவை மாற்றிக் கொண்டு திரும்புகிறார் என எனக்குக் கடைசி நேரத்தில் தகவல் கிடைத்தது. நான் அவரின் இணைப்புச் செயலாளருடன் தொடர்பு கொண்டேன். அவர் கூறிய செய்தி எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் தடாலடிப் பதில் ஒன்று கொடுத்தேன். அது ரணிலின் முடிவை மாற்றியது. அவர் திரும்பவும் வாகனத்தைப் புத்தக வெளியீட்டு நிகழ்வு நடைபெறும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்துக்குத் திருப்ப உத்தரவிட்டார். அவற்றின் விவரத்தையும் நூல் வெளியீட்டு நிகழ்வில் என்னைப் பற்றி ரணில் கூறிய விடயத்தையும் நாளை பார்ப்போமா நண்பர்களே...?

- மின்னல் -

## உயர்பாதுகாப்பு வலயப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மித்த பிரதேசம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை தலைமையகம், பொலிஸ் தலைமையகத்தை அண்மித்த பகுதிகள் போன்றவை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக முன்னைய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தன.

தவறான சட்டத்தின் கீழ் தவறான பிரகடனம் இதுவென இதற்குப் பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வந்த நிலையில், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## நுரைச்சோலை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் இரண்டும் முழுத் திறனில் இயங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் நடந்து வரும் 3 மாத வழக்கமான சீரமைப்பு பராமரிப்பு பணிகள் ஒக்டோபர் நடுப்பகுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்தார்.

## கையெழுத்து இயக்கம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான இந்தப் போராட்டத்தை காங்கேசன்துறை மாவட்டபுரத்தில் ஆரம்பித்து வைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் சிரேஷ்ட உப தலைவர் சி.வீ.கே.சிவஞானம் போன்றோர் இன்று தங்காலையில் இந்த கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தை முடித்து வைக்கும் நிகழ்விலும் பங்குபற்றுகின்றனர்.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் இன்றைய இறுதி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை முன்னின்று நடத்துகின்றார். கல்விசார் தொழிற்சங்கப் பிரமுகர் ஜோசப் ஸ்டாலின், பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் என்று பலர் இன்றைய இறுதி நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

காங்கேசன்துறையில் புறப்பட்ட கையெழுத்து சேகரிக்கும் ஊர்தி இலங்கையின் இருபத்தியைந்து மாவட்டங்களிலும் மக்களின் கையெழுத்துக்களைச் சேகரித்த பின்னர் இன்று தங்காலையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தனது செயற்பாட்டைப் பூர்த்தி செய்கின்றது.

## பூநகரி- கிராஞ்சி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் தினம் காலை 06 மணிக்கு குறித்த போராட்டம் ஆரம்பமானது. நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் யாரும் இதுவரையில் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## வலப்பனை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதையல் தேடல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர் என சந்தேகிக்கப்படும் நிலையில், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வலப்பனை, குருதுஓயே பகுதியில் உள்ள புதையல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறும் பகுதியென கருதப்படும், குழியொன்றில் இருந்தே 61 வயதான அபேசிங்க பண்டா மற்றும் 30 வயதான ருவான் குமார ஆகிய இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இருவரும் நேற்று முன்தினம் வீடுதிரும்பாத நிலையில், அது தொடர்பில் உறவினர்கள் வலப்பனை காவல்துறையினர் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் விசாரணையின்போதே, சட லங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், குழிக்குள் இருந்து தண்ணீர் மோட்டார் இயந்திரமும், குழிக்கு வெளியே இருந்து ஜெனரேட்டர் உள்ளிட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

## சட்டவிரோதமான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகப்படுத்தியுள்ளது. மதுபான போத்தலில் ஒட்டப்பட்டுள்ள பாதுகாப்பு ஸ்டிக்கரில் உள்ள கியூஆர் குறியீட்டை சம்பந்தப்பட்ட கணினி செயலியைக் கொண்டு ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கான் செய்ய முடியும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தச் செயலியின் மூலம் தேவையான தகவல்களைப் பெற முடியாமல் அது நிராகரிக்கப்பட்டால், அப் மூலம் முறைப்பாடு அளிக்கலாம் என்றும், சட்டம் உடனடியாக அமுல்படுத்தப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'EXCISE TAX STAMP VALIDATOR' எனப் பெயரிடப்பட்ட இந்த அப்ளிகேஷன அனைத்து அண்ட்ராய்ட் தொலைபேசிகள் மற்றும் அப்பிள் தொலைபேசிகள் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நேற்று முதல் வாடிக்கையாளர்கள் உரிய செயலியைக் கைத்தொலைபேசியில் பதிவிறக்கம் செய்து அதன் ஊடாக தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என கலால் திணைக்களம் மேலும் தெரிவிக்கின்றது.







**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## தோட்டச் சேவையாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தலவாக்கலை மல்லியப்பு கோவில் சந்தி பகுதியில் ஆரம்பமான பேரணி, தலவாக்கலை நகரை வந்தடைந்து, அங்கு பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு மற்றும் தொழில்சார் சலுகைகளை வலியுறுத்தும் பதாதைகளை தாங்கியவாறு சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் நேற்று முன்தினத்துடன் காலாவதியானது. இந்நிலையில் தற்போதைய வாழ்க்கைச் சுமைக்கேற்ப 70 வீத சம்பள உயர்வு வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வலியுறுத்துகின்றது.

எனினும், 24 வீத சம்பள உயர்வை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு முதலாளிமார் சம்மேளனம் முன்வந்துள்ளது. இதனை ஏற்க மறுத்தே, தமது கோரிக்கை ஏற்கப்பட வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் இடம்பெற்றது.

தோட்டக் கம்பனிகளின் லாபம் மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், இந்த சம்பள உயர்வை வழங்கக்கூடியதாக இருக்கும் என போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

மலையக மக்கள் முன்னணி உட்பட மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் பல இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடதக்கது.

## போதைப் பொருளுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமுர்த்தி வங்கி ஒழுங்கை பகுதியில் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருக்கும் நபர் தொடர்பான இரகசிய தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்தை முற்றுகையிட்டு பொலிஸார் நடத்திய சோதனையில் 260 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 2 பேர் கைது செய்யப்பட்டனர். 15 மற்றும் 25 வயதான இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சபுகஸ்கந்த எண்ணெய் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் கடந்த சில நாள்களாக கடும் துர்நாற்றம் வீசுவதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரணபியகம பிரதேச சபையின் தலைவர் ஆனந்த கணேபொலவிடம் வினவியபோது, இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அது தொடர்பான அறிக்கையை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிகரெட், மது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் -

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோலின் விலையைக் குறைப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் விலையை 40 ரூபாவாலும், ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் விலையை 30 ரூபாவாலும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் புதிய விலையாக 410 ரூபாவும், ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் புதிய விலையாக 510 ரூபாவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எரிபொருள்களின் விலைகளில் எந்தவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

## மின் ஒழுக்கில் தீ .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியில் உள்ள வீடொன்றில் கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சடலமாக நேற்று அதிகாலை கண்டறியப்பட்டனர்.

அதிகாலை 4.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை நெடியகாடு, ஏ.ஜி.ஏ. ஒழுங்கையைச் சேர்ந்த சரவணபவா ரஞ்சித்குமார் (வயது -30), அவரது மனைவி கிருசாந்தினி (வயது - 26) என்ற இருவருமே சடலமாக மீட்கப்பட்டனர்.

தம்பதி உறங்கிய அறையில் தீ பற்றி எரிவதைக் கண்ட வீட்டிலிருந்தவர்கள் அறையை உடைத்து உள்நுழைந்தபோது இருவரும் தீயில் எரிந்து சடலமாகக் காணப்பட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணையில் அறையில் மின் ஒழுக்கு ஏற்பட்டமை மற்றும் பெற்றொல் பரவியமை தொடர்பில் கண்டறியப்பட்டன.

உயிரிழந்த மனைவியின் கையில் அலைபேசி சார்ஜர் வயர் இருந்துள்ளமை மீட்கப்பட்டது.

நேற்று மாலை மந்திகை ஆதார மருத்துவமனையில் இடம்பெற்ற உடற்கூற்று விசாரணையில் தீக் காயங்களுக்கு உள்ளாகியமையினால் உயிரிழந்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

கணவனின் அலைபேசி கொழும்பில் தவறவிடப்பட்டுள்ளது. அதனால் அவர் சீனாவின் தயாரிப்பிலான அலைபேசி ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.

அந்த அலைபேசி வெப்பமாகி அல்லது சார்ஜர் வெப்பமாகி தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம்.

படுக்கை அறையில் பெரிய கேனிலும் மற்றும் போத்தலிலும் பெற்றோல் சேமித்து வைக்கப்பட்டிருந்துள்ளது என்று தடயவியல் விசாரணையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.







# யாழில் வாகன விபத்துக்களால் உயிரிழப்புகள் அதிகரிப்பது ஏன்?

**ந.லோகதயாளன்**

யாழில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் மாதம் ஒன்றுக்கு 5 இற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர் என வைத்தியசாலைத் தரவுகள் உறுதிசெய்கின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 12 ஆண்டுகள் இடம்பெற்ற விபத்துக்களின் காரணமாக 26 ஆயிரத்து 188 பேர் காயமடைந்து 623 பேர் மரணமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வாறு அதிகரித்துள்ள வாகனப் போக்குவரத்து, விதிமுறை மீறிய பயணம் உள்ளிட்ட பல வேறு காரணங்களால் 2010 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 12 ஆண்டு காலப் பகுதியிலேயே இந்த 28 ஆயிரத்து 188 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களிலேயே 623 பேர் மரணமடைந்தும் உள்ளனர் எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் 2010 இற்கு முந்திய 9 ஆண்டுகளான 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் 9 ஆயிரத்து 556 பேர் படுகாயமடைய 163 பேர் மட்டுமே மரணமடைந்துள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் புள்ளிவிவரத் தரவுகள் உறுதி செய்கின்றன.

இவற்றின் அடிப்படையில் முதல் 10 ஆண்டுகளை விடவும் இரண்டாம் 10 ஆண்டில் காயமடைந்தோர் எண்ணிக்கை 250 விகித்த்தை விட அதிகமாகக் காணப்படுகின்றது. அத்தோடு மரணம் அடைவோர் தொகை 280 விகிதம் அதிகரித்துள்ள தாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் வீதி விபத்துக்கள் மரணங்களில் இறுதி இரண்டு ஆண்டுகளில் 2020 ஆம் ஆண்டு 257 பேர் காயமடைந்து 46 பேர் மரணமடைந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை மிக அதிகரித்து ஆயிரத்து 604 பேர் காயமடைய 80 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் போதனா வைத்தியசாலையின் புள்ளிவிரம் உறுதி செய்கின்றது.

இவ்வாறு 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு விபத்துகள் அதிகரித்து உயிரிழப்புக்கள் அதிகரித்தமைக்கான காரணம் என்ன என போதனா வைத்தியசாலையில் பிரதிப் பணிப்பாளரான மருத்துவர் யமுனானந்தாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

வீதி விபத்துக்கள் அதிகரித்த வாகனங்கள் முதல் பல்வேறு காரணங்களால் இடம்பெற்றபோதும் உண்மையில் 2020 ஆம் ஆண்டிடைவிட 2021 ஆம் ஆண்டில் விபத்துக்கள் அதிகரிக்கவில்லை. மாறாக 2020ஆம் ஆண்டு விபத்துகள் குறைவடைந்தன என்பதே உணமையாகும். ஏனெனில் 2020 ஆம் ஆண்டு அதிகரித்த கொரோனா காரணமாக ஊரங்குச் சட்டம் மற்றும் நடமாட்ட முடக்கம் அமுல் இருந்தமையால் வாகனங்கள் பயணிக்கவில்லை அதனால் விபத்துக்கள் ஏற்படவில்லை. - என்றார்.

இவை அனைத்தும் போரின் பின்பு அமைக்கப்பட்ட வேகப் பாதைகள் மற்றும் அதி நவீன ரக வாகனங்களின் அதிகரிப்போடு வீட்டுக்கு இரண்டுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள் பாவனையே முக்கிய காரணமாக இருப்பதோடு இன்று உத்தியோகத்தர்கள் அன்றி சாதாரண தினக் கூலி பணியாளர்வரை மோட்டார் சைக்கில் பாவனை என்பனவே காரணம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதன் அடிப்படையில் ஆண்டுதோறும் வரி செலுத்தும் தரவுகளின் அடிப்படையில் இன்று 7 லட்சம் மக்கள் வாழும் சூழலில் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 327 மோட்டார் சைக்கிள் உள்ளமை உறுதி செய்யப்படுகின்றது. இதேநேரம் ஓட்டோக்கள் 13 ஆயிரத்து 599 உள்ளதோடு 6 ஆயிரத்து 18 கார் மற்றும் சிறு வான்கள் உள்ளன.

இதேபோன்று ஏனைய வாகனங்கள் உட்பட குடாநாட்டில் மட்டும் இன்று பதிவு செய்யப்பட்டவையாக ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 344 வாகனங்கள் உள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதேநேரம் குடாநாட்டு வீதிகளில் பயணிக்கும் அதிக டிப்பர் வண்டிகள், பஸ்கள் மற்றும் லீசிங்கில் இருக்கும் வாகனங்கள் அனைத்தும் அந்த நிறுவனங்கள் உள்ள தெற்கில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் இந்த எண்ணிக்கையில் உள்ளடங்கவில்லை என்பதோடு குடா நாட்டில் உள்ள பல ஆயிரம் படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனையில் உள்ள வாகனங்களும் வடக்கு மாகாணப் பதிவில் இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதேநேரம் இவ்வாறான வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த என்னதான் தீர்வு என மாவட்டத்தின் மூத்த பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது–

25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான வாகனம் நின்ற காலத்தில் அமைத்த வீதிகள் இன்று 2 லட்சத்தையும் தாண்டிய வாகன நெரிசல் மற்றும் கனரக வாகன அதிகரிப்பு பிரதான காரணமாக உள்ளதால் வீதிகள் அகலிக்கப்பட்டாலே விபத்தைக் குறைக்க முடியும் அல்லது ஒரு வழிப் பாதைகள் மூலமோ குறித்த வாகனத் தடை மூலம் மட்டுமே எதிர்காலத்தில் விபத்தைத் தடுக்க முடியும்.

இதேநேரம் வீதி அகலிப்பு என்பதும் தற்போதைக்கு சாத்தியமில்லை. அதாவது ஒரு பரப்பு காணி நகரில் லட்சத்தை தாண்டி கோடியை எட்டிவிட்டது. அதனால் மக்கள் நிலத்தை விட்டுக்கொடுக்கத் தயார் இல்லை. அதே நேரம் உணவுக்கும் மருந்துக்குமே காசு இல்லாத அரசும் நிலத்துக்கு பணம் வழங்காது . என்றார்.

## துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சின் பொறுப்புக்கள் பிரேமலால் ஜயசேகரவிடம்!



துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தனது அமைச்சின் கீழ் உள்ள விடய தானங்கள் மற்றும் செயற்பாடுகளை இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவிடம் கையளித்து அசாதாரண வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இதன் விளைவாக பலாலி, மட்டக்களப்பு, இரத்மலானை விமான நிலையங்களின் அபிவிருத்திகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், காங்கேசன்துறை மற்றும் ஒலுவில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதும் அவரது பணிகளில் அடங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு இராஜாங்க அமைச்சர் ஆதரவளிக்க வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலை உருவாக்கம்!

### ஜனாதிபதி முன்மொழிவு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கையில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

பிலிப்பைன்ஸில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவாவை ஜனாதிபதி சந்தித்தார்.

இதன்போதே இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த காலங்களில் இலங்கைக்கு வழங்கிய நிதி உதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தனது நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் நாட்டுக்கும் வங்கிக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன் போது கலந்துரையாடினார்.

ஜனாதிபதிக்கு பதிலளித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவதாக உறுதியளித்தார்.

## விளையாட்டு அமைச்சு பொறுப்பை ஏற்கவும்!

### நாமலிடம் கோரிக்கை

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சை உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு நாமல் ராஜபக்ஷவிடம் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு சங்க அதிகாரிகள், முன்னாள் வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் அடங்கிய குழுவினர் நாமல் ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர் என விளையாட்டுத்துறை தொடர்பான தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டுத்துறையை தன்னிச்சையாக கட்டுப்படுத்த அமைச்சு தயாராகி வருகிறார் எனவும் சரியான திட்டமிடல் மற்றும் எதிர்கால பார்வை இன்றி இலங்கையில் விளையாட்டுகள் தற்போது வழிதவறி வருகின்றன எனவும் முன்னாள் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் நாமல் ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட திட்டம் இன்றி மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாடுகளால் விளையாட்டுத்துறையின் எதிர்காலம் பாரிய ஆபத்தில் உள்ளதாக நாமலிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு நாமல் ராஜபக்ஷவிடம் அதிகாரிகள், முன்னாள் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனக்கு அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வதில் விருப்பம் இல்லை என்றும் ஆனால், தேவைப்பட்டால் அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ளவும் தயார் எனவும் நாமல் இங்கு தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது. விளையாட்டுத்துறை, துறைமுகம் உட்பட பல அமைச்சுக்களின் அமைச்சர்கள் மாறப் போவதாக கடந்த வாரம் அரசியல் களத்தில் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உடுவிலில் சிறுவர் தின நிகழ்வு!

உடுவில் பிரதேச கலாசார மத்திய வளநிலையமும் சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய சிறுவர்தின நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) உடுவில் கலாசார மத்திய வள நிலையத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உடுவில் கலாசார மத்திய வள நிலையத்தில் பொறுப்பு உத்தியோகத்தர் லயன் பத்மதேவமலர் மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன்.க.டினேஸ் பிரதம விருந்தினராகவும், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மாணவர்களின் பல்கலை நிகழ்வுகள் நடைபெற்றமையுடன், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் விருந்தினர்களால் வழங்கிவைக்கப்பட்டன.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான அனுசரணையை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் க.டினேஸ் வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2022இல் வெளியிடப்பெற்றது.